விலை ரூபா 6.00

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்


# ஈழநாடு வாரமலர்

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 32 இதழ் 225

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 17 – 9 – 1995


## தியாகி திலீபனின் 8-ம் ஆண்டு நினைவு தினம் 2-வது நாளாக அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் எட்டாம் ஆண்டு நினைவு தினத்தின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் நேற்று யாழ். குடாநாடு பூராவும் சிறப்பாகக் அனுஷ்டிக்கப்பட்டது.

உண்ணாவிரதங்கள் மற்றும் சிரமதானப் பணிகளில் பெருமளவு மக்கள் பங்கேற்றுகொண்டனர்.

காலையில் மக்கள் வழமைபோன்று தியாகி திலீபனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றி மலர்தூவி

(8-ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி மீது ஷெல் தாக்குதல் ஒரேகுடும்பத்தில் நால்வர் காயம்

(வடமராட்சி)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வடமராட்சி குடியிருப்புகளை நோக்கி ஏவப்பட்ட அகோர எறிகணை வீச்சில் வீடொன்றில் உறங்கிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாயும், பெண் சிறுமியும் கால்களை இழந்தனர். தந்தை வலது காலில் படுகாயமடைந்தார்.

நேற்று முன்தினம் இரவு சுமார் 10-30 மணியளவில் பலாலிப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களே வல்வெட்டி பழைய பொலிஸ் நிலையத்திற்கருகில் அரசடி வீதியில் உள்ள வீடொன்றின் மேல் வீழ்ந்து வெடித்தது. அதனால் அங்கு உறங்கிக்கொண்டிருந்த

(8ம் பக்கம் பார்க்க)

## சவாரித்தம்பர்



சவாரித்தம்பர்: வண்டில் ஆசனத் தட்டில் இருக்கிறவருக்கு செம்மையா நாணயம் பிடிக்கத் தெரியவேணும்.

சின்னக்குட்டி: கண்டவையின்ரை புத்தியும் கேட்டுப் பிடித்தால் சில்லெடுப்பாத்தான் முடியும்.

சவாரித்தம்பர்: சில்லெடுப் பென்ன... குடைக்கெடுத்து அடிச்சாலும் அடி சிடும்.

— சிரித்திரன் சுந்தர்.

## விமானசேவை நிறுத்தப்பட்டதால் பல கோடி ரூபா நஷ்டமாம்

[கொழும்பு]

உள்நாட்டு விமானப் போக்குவரத்தை அரசு கால வரையறையின்றி இடை நிறுத்தியுள்ளதால் விமானப் படையினரின் பயிற்சி நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள்

(8ம் பக்கம் பார்க்க)

# வடபகுதியில் தொடரும் இராணுவத் தாக்குதல்களுக்கு மனித உரிமை அமைப்புகள் கண்டனம்

(கொழும்பு)

வடபகுதியில் இராணுவத்தினர் தொடர்ந்து மக்கள் குடியிருப்புகள் மீது நடத்திவரும் இராணுவத் தாக்குதல்களுக்கு மனித உரிமை அமைப்புகள் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளன.

வடபகுதியில் இராணுவம் தற்போது மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளினால் பெருந்தொகையான பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மனித உரிமை அமைப்புகள் கவலை தெரிவித்துள்ளன.

அச்சுவேலி, புத்தூர், புன்னாலைக்கட்டுவன், உரும்பிராய், நீர்வேலி ஆகிய பகுதிகளை நோக்கி இராணுவம் கடும் ஷெல் தாக்குதல்களை தொடர்ந்து நடத்துவதினால் இப்பகுதிகளிலுள்ள பொது மக்களின் நலன்களை இராணுவம் கருத்தில் கொள்ளவேண்டும் என்று கொழும்பிலுள்ள இராணுவத் தலைமைப் பீடத்துக்கு மனித உரிமை அமைப்புகள் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளன. -வி-ரி

## பலாலியிலிருந்து இரவு நேர ஷெல் தாக்குதல் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்தினம் இரவு 8 மணி தொடக்கம் நேற்று காலை வரை வலிகாமம் பகுதிகளில் உள்ள மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

புன்னாலைக்கட்டுவன் ஊரெழு, ஈவினை, நவக்கிரி நிலாவரை, தோப்பு சிறுப்பிட்டி, குப்பிளான், புத்தூர் மேற்கு போன்ற பகுதிகளில் ஷெல்கள் விழ்ந்து வெடித்த வண்ணம் இருந்தன.

ஊரெழுவில் வீழ்ந்த ஷெல்லினால் ஆர். செல்வக்குமார்

(2ம் பக்கம் பார்க்க)

## கண்மூடித்தனமான ஷெல் வீச்சினால் அப்பாவிப் பொதுமக்கள் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் பகுதியில் கடந்த செவ்வாய்கிழமை ராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த படையினர் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதல்களினால் இதுவரை 13 அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர் குழந்தைகள் வயோதிபர்கள் உட்பட அறுபதிற்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்.

நூற்றுக்கணக்கான வீடுகளும் கட்டிடங்களும் சேதமடைந்துள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

தொடர்ந்து இடம் பெற்ற

(8ம் பக்கம் பார்க்க)

## அணு ஆயுத பரிசோதனைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

[கொழும்பு]

பிரான்ஸ் நடாத்தும் அணு ஆயுத பரிசோதனைக்கு எதிராக நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதரகம் முன்பு பெண்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்

பதாகைகளை தாங்கிய வண்ணம் பிரான்சுக்கெதிரான கண்டன குரல்களை இப் பெண்கள் எழுப்பினர்.

பிரான்ஸ் மேற்கொள்ளும் அணு ஆயுத பரிசோதனைய

(8ம் பக்கம் பார்க்க)


✶ தரமான சுவையான ஐஸ்கிறீம்
✶ குளிர்பானங்கள்
✶ ஸ்பெஷல் நட்ஸ் வனிலா
✶ கிறீம் சர்பத்
✶ டூருட்சலட்
✶ சிற்றுண்டி வகைகள்

ராஜா குளிர்சுவையகம் (ராஜா கிறீம் ஹவுஸ்)

36, சந்தோசம் தெரு,
யாழ்ப்பாணம். (ஏ -5246)



விடுதலைப்புலிகள் வாழ வேண்டுமென்றோ ஆள வேண்டுமென்றோ ஆசை கொள்ளவில்லை — எமது மக்களின் நிரந்தரமான சுபீட்சமான எதிர்காலம் கிடைககுமானல் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்.

— தியாகி திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் (ஏ-5303)

## வரி விளம்பரம்

### பிரம்புப் பின்னல்

பிரம்பிலான சகல பின்னல் வேலைகளும் செய்து கொடுக்கப்படும். ராஜன் பின்னலகம், 286, அருச்சுனு வீதி ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். (எ-5306)

### தேவை

வெற்று ஜாம் போத்தல்களும், தரமான விளாம்பழங்களும் தேவை. உடுவில் வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள ரேஸ் பிரான்ட் இனிப்பு உற்பத்தி நிலையத்தில் கொள்வனவு செய்யப்படும். (எ-5302)

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் I C, அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனு, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற் வகைகளையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம். அன்ரனு பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (ஏ-5245)

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatitis) இரப்பை அல்சர், ஆஸ்மா, மூட்டுவாத ரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம், 121, 2-ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1667)

### கணிதம் - 95

O/L மீட்டல் இதுவரையும் பெறு பேறடையாதவர்கட்கு திரிகோண கணிதம், மடக்கை வரைபு, தேற்றங்கள் பங்கு முதலியன B. Sc ஆசிரியரால் கற்பிக்கப்படும் 85, திருநெல்வேலி சிவன்கோவில் மேற்கு வீதி. (சி-1668)

நடைபெற்ற
A/L 95 பரீட்சை
Chemistry, Physics Botany, Zoology பாடங்களுக்கான விடைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
**BOND**
யாழ்ப்பாணம்
(ஏ-5309)

---

யாழ் / தொழில்நுட்பக் கல்லூரி
வணிக மாணவர் மன்ற

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

**15 - 09 - 1995**

அதிர்ஷ்ட இலக்கங்கள்

1-ம் பரிசு இல. 17203
2-ம் பரிசு இல. 15959
3-ம் பரிசு இல. 12423

ஆறுதல் பரிசிற்கான இலக்கங்கள் :
5432, 14664, 19260, 15071, 12133

★ 20 - 10 - 1995 முன்பாக பரிசில்களை பெற்றுக்கொள்ளவும்.

வணிக மாணவர் மன்றம்.
தொழில் நுட்பக் கல்லூரி, [ பகல் ]
பிறவுண் வீதி, கொக்குவில். சி-1674)

---

## அறிவித்தல்

### விதை உருளைக்கிழங்கு முற்பண அறவீடு

1994 / 95 காலபோகத்திற்கென ஹொலண்ட் நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கும் 150 மெ. தொன் விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள விவசாயிகள் இக்கிழங்கைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவாக 20 - 09 - 1995ல் இருந்து 15 - 10 - 95இற்குள் தாம் விண்ணப்பித்த விதைக் கிழங்குகளுக்கு ஒரு பெட்டிக்கு 3500/- ரூபா முற்பணமாக தங்கள் பிரதேச செயலர் பிரிவுகளில் அமைந்திருக்கும் பசுமை வேளாண் சேவை நிலையங்களில் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (ஏ-5311)

---

## நன்றி

எமது கடை திறப்பு விழா அன்று வருகை தந்து சிறப்பித்த அன்பர்கள் ஆதரவாளர்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றி

## புதிய நதியா நகைமாடம்

103, சந்தோசம் சாலை **103** கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (ஏ 5298)

---

பலாலியிலிருந்து
(1ம் பக்கத் தொடர்ச்சி)
[வயது-44] இ, கதிர்காமலிங்கம் [வயது-67] ஆகிய இருவரும் புத்தூர் மேற்கில் வீழ்ந்த ஷெல்லுக்கு பி கிருஷ்ணகுமார் [வயது-23] என்ற இளைஞரும் காயமடைந்தனர். 170-பி

---

## COLLEGE OF ECONOMICS

யாழ்ப்பாணம்

## A/L 97 வர்த்தகப் பிரிவு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| வர்த்தகம் | — | வரதன் |
| வணிகப்புள்ளி விபரவியல் | — | தவசேகர் |

ஆரம்பம் : 24 - 9 - 95 ஞாயிறு 11-00 A. M.

**A/L 96** பொருளியல்
பகுதி II
ஆரம்பம் : 24 - 9 - 95 ஞாயிறு 12-00

## பொருளியல் கல்லூரி

110/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[ மக்கள் வங்கிக்கு அருகாமை ]
(ஏ-5304)

---

ஆண்டு - 5
புலமைப் பரிசில்
+
பாடசாலை அனுமதி பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் - விடைகளுடன் ஒவ்வொரு ஞாயிறும் வெளியிடப்படும். அடுத்த வெளியீடு 17-9-95 ஞாயிறு.
**BOND**
யாழ்ப்பாணம்
(ஏ-5308)

---

மாதாந்த பயிற்சி வினாத்தாள்கள் – விடைகளுடன

ஆண்டு 3, 4, 5, 6, 7, 8 எல்லா பாடங்களுக்கும் செப்ரெம்பர்-மாத வெளியீடு 18-9-95 வெளிவரும்.
**BOND**
யாழ்ப்பாணம்
(எ-5310)

---

**D. M. I.**
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
**A/L 96**
பகல் நேர வகுப்பு
(DAY)
கலை வர்த்தகப் பிரிவு
வகுப்புக்கள் நடைபெறுகிறது.
(ஏ-5293)

---

சுத்தமான சுவையான
★ ஐஸ்கிறீம் வகைகள்
★ குளிர்பானங்கள்
★ சிற்றுண்டி வகைகள்

## ★ லிங்கம் குளிர்களி நிலையம் ★

[ கூல்பார் ]
வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.
ஏ-5305

## வைப்பகம்-இராணுவவேலி-தீர்வுயோசனை

# முதலீடு - மர்மச் சடலங்கள்

## வாரசாரம்

ச. தியாகராசா

தமிழீழ வைப்பகம் தனது சேவையைத் திறம்பட நடாத்தி வருவது மாத்திரமல்லாமல் தனது சேவையை பல பகுதிகளுககும் விஸ்தரித்தும் வருகிறது யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் தன் கிளைகளை இதுகாலும் வைத்திருந்த தமிழீழ வைப்பகம் தனது செயற்பாட்டை நெல்லியடிக்கும் விஸ்தரித்துள்ளது. சிறிலங்கா அரசு வெளிநாடுகளிலிருந்து தான் பெற்ற கடன்களை திருப்பிக்கொடுக்க முடியாத நிலையில் கீழ் நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழீழவைப்பகத்தின் மூலம்நாம் யாரிடமும் கையேந்திக் கடன் வாங்காது எம்மக்களின் அபிலாசைகளை நிறைவேற்று



கிறோம். எமது மக்கள் பெரும் தொகையான பணங்களை சிறிலங்காவின் வங்கிகளில் முடக்கி வைத்திருக்கிறார்கள். இந்தப் பணங்களை அரசு கடனகப் பெற்று எமது விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு ஆயுத தளபாடங்களை வாங்கிக் குவிக்கிறது. இப்பணங்கள் எல்லாம் எமது தமிழீழ வைப்பகத்தில் முதலீடு செய்யப்பட்டால் மக்கள் எதிர்பார்க்கும் வட்டியும் அவர்களுக்கு வழங்கப்படும். அத்துடன் அப்பணம் எம்போராட்டத்தை முன்னெடுக்கவும் உதவும். தமிழீழ வைப்பகத்தின் நம்பகத் தன்மையில் எவரும் ஐயங் கொள்ளவும் தேவையில்லை. விடுதலைப்புலிகளின் வளர்ச்சியைநோக்குபவர்கள் அவர்க எவ்வித கண்ணியம், கட்டுப்பாடு உடையவர்கள் என்பதை அறிந்துகொள்ளலாம்.

### இராணுவ வேலி

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் முன்னர் விட்ட தவறு இப்போது எமது போராட்டத்துக்கு பல முட்டுக்கட்டைகளைப் போடுகிறது. கூட்டணியின்மூதூர் பிரதேசத்திலுள்ள பல தமிழ்க் கிராமங்களை சேருவாவிலைத் தொகுதியுடன் இணைப்பதற்குச் சம்மதப் தெரிவித்ததன்மூலம் அம்மக்கள் ஒரு தமிழ்ப் பிரதிநிதியை அதுவரை நாடாளுமன்றுக்கு தேர்ந்து எடுத்து வந்த உரிமையை இல்லாமல் செய்தனர். இப்போது விடுதலைப் போராட்டம் நடக்கிறது. கிழக்கில் விடுதலைப்புலிகளின் கை ஓங்கியுள்ளது. இராணுவம் திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு வரை விடுதலைப்புலிகள் நடமாடும் காட்டுப் பாதையைத் தடை செய்யும் நோக்குடன் சேருவாவில வெலிக்கந்தைக் காட்டுப்பகுதியில் இராணுவ வேலி ஒன்றை அமைப்பதற்கு ஆரம்பித்துள்ளனர். கூட்டணியினர் அப்ப விட்ட பிழை எவ்விதம் அடுத்த சந்ததியினரைப் பாதிக்கின்றது என்பதற்கு இது நல்ல எடுத்துக்காட்டு.

### தீர்வு யோசனை

தமிழர் விடுதலைக் கூட்டணியினர், சவப்பெட்டிக்குள் தள்ளப்பட்ட சந்திரிகாவின் தீர்வுத்திட்ட யோசனையை இன்னும் கைவிட்டபாடில்லை. தீர்வு யோசனைகள் நகல் வடிவில் விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் சமர்ப்பிக்கப்பட்டபின் கூட்டணியினர் அதுபற்றி சிங்கள அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்போகிறார்களாம். கூட்டணியினர் சிங்களவர்களாலேயே நிராகரிக்கப்படும் நிலையில் உள்ளதும், தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையையும் தராததுமான தீர்வு யோசனைகளுக்கு உயிர் கொடுப்பதற்கு முயலுதல் தேசத் துரோகத்தின் உச்சநிலை என்றுதான் கூறவேண்டும்.

### வெளி முதலீடு

சந்திரிகா அரசின் போர்க் கோலமும், தென் பகுதியில் அவர் நடத்திவரும் ஸ்திரமற்ற அரசியலும் வெளிநாட்டு முதலீடுகளை சிறிலங்காவுக்குள் ஈர்க்கவில்லை. வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பதற்காக மேற்கு நாடுகளிலும், தென் கிழக்காசியநாடுகளிலும் அமைச்சர் கதிர்காமராலும், மற்றவர்களாலும் செய்யப்பட்ட பிரசாரங்கள் எவ்வித பலனையும் அளிக்கவில்லை சிறிலங்கா அரசு முதலீட்டாளர்களுக்கு பல சலுகை



களை வழங்க ஆயத்தமாய் உள்ள போதிலும் முதலீட்டாளர்கள் தயங்குகிறார்கள். சந்திரிகா தனது தேர்தல் கால மானிய அறிவிப்புக்கள் பலவற்றை மீளப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டதைச் சுட்டிக்காட்டிப் பொருளாதார ஆய்வாளர்கள் சிறிலங்கா இன்னும் ஒரு வருட காலத்திற்குள் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்திக்கும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

### மர்மச் சடலங்கள்

வாவிகளில் மிதந்த மர்மச் சடலங்களின் படுகொலைகளுக்கு எதிர்க்கட்சித் தலைவரும் ஐ. தே. கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவுக்கும், ஆளும் கட்சியில் உள்ள அமைச்சருக்கும் தொடர்பு உள்ளது என தகவல்கள் கூறுகின்றன. சந்திரிகா இது பற்றி பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்த இருந்தார் என்றும் அது பின்னர் கைவிடப்பட்டதென்றும் தகவல்கள் வந்துள்ளன. பெரிய இடத்து விடயம் என்பதாலும், தமிழர் இறந்தால் என்ன படுகொலை செய்யப்பட்டால் என்ன சிங்களவர்களுக்கு எல்லாம் ஒன்றுதான் என்ற நிலையில் இந்த விடயமும் கிடப்புக்குள் போய்விடும்.

---

நமது நோக்கு

## தீர்வு ஒரு கண்துடைப்பு

ஜனதிபதி சந்திரிகா வழமையாக கால தாமதத்திற்கு முன்னுதாரணமாக விளங்குபவர். தற்போது மிக முக்கிய அரச நிகழ்ச்சிக்குக் கூடச் சமுகமளிக்காதுவிட்டுள்ளார். இதற்குக் கூறப்படும் காரணம் சந்திரிகாவின் உயிருக்கு விடுதலைப் புலிகள் ஆபத்து ஏற்படுத்தலாம் என்ற பயம்.

விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள். இது சந்திரிகாவுக்கு நன்ருக தெரியும். அதை அவர் தன் வாயாலேயே கூறியுமுள்ளார். அந்த அடிப்படையில் தான் அவரது கபடத்தனமான பேச்சுவார்த்தையும் விடுதலைப் புலிகளுடன் அவர்களின் தேசியக்கொடியுடன்நடத்தப்பட்டது. இப்போஏதோ தீர்வு யோசனைகள் என்று கூற வெளியிடப்பட்டுள்ளது. ஆனல் அது தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளின் பரிசீலனைக்கு தன்னும் அனுப்பப்படவில்லை.

இதை வைத்துக்கொண்டுதான் ''ஜனதமித்ரோ'' என்னும் சிங்கள அமைப்பு அரசு தொடர்ந்து யுத்தத்தை நடத்தவே விரும்புகிறது. அரசியல் தீர்வு என்பது வெறும் கண்துடைப்பாகவே உள்ளது என்றும் கூறியுள்ளது. அவ்வமைப்பு மேலும் இனப் பிரச்னையை அதாவது தமிழ் மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்கான உண்மையான அக்கறையில்லாமல் மேற்குலக நாடுகளை திருப்தி செய்வதே நோக்கமாக் கொண்டு செயல்படுகின்றது என்றும் அரசினல் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வு யோசனைகள் மேற்குலக நாடுகளைக் கவருவதற்கான வெறும் கண்துடைப்பு என்றும் அரசியல் தீர்வு நகல் அறிக்கை என்ற பெயரில் மேற்கு நாட்டுத் தூதரகங்களுக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளதென்றும் ஆனல் இதுபற்றி தமிழ் மக்களுக்கோ சிங்கள மக்களுக்கோ தெரியாதென்றும் கூறுகிறது.

சிங்களவர்களுக்கும் சிங்கள அமைப்புகளுக்கும் தெரிந்த உண்மை தமிழ் மக்களை உண்மையில் பிரதிநிதித்துவம் செய்யாத கொழும்பில் இருந்து இயங்கிக் கொண்டு அரசுக்கு வால் பிடித்துக்கொண்டிருக்கும் புளொட் குழுவுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் தெரியாது போனது வியப்புத்தான். புளொட் குழுவினர் வவுனியா, மட்டக்களப்பு, மன்னர், திருகோணமலை மக்களுக்கு தீர்வுத்திட்ட யோசனைகள் பற்றி விளங்கப்படுத்திப் பிரச்சாரம் செய்யப்போகின்றனராம். எதை விளங்கப்படுத்தப் போகிருர்களோ தெரியவில்லை. தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை கிடைத்துவிட்டதென்ரு? அல்லது மத்திய அரசின் தலையீடு இல்லாமல் போய்விட்டதென்ரு இவர்கள் பிரசாரம் செய்யப்போகிருர்கள்.

இதற்கிடையில் யுத்தம் வேகம் அடைந்து கொண்டு வருகிறது. விடுதலைப் புலிகளும் தங்கள் போர் மூலோபாயங்களையும், தந்திரோபாயங்களையும் திறம்பட நடைமுறைப்படுத்துகிருர்கள்.

இதைப் போர் வெறியன் ரத்வத்தை விளங்கிக் கொள்ளாவிடினும் இராணுவத்தினரும், அரசியல்வாதிகளும் அறிந்துள்ளனர். இதனல் போலும் சந்திரிகா சிறுபான்மை தமிழரின் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணவிட்டால் மீண்டும் பல அமைப்புக்களுடன் யுத்தம் செய்யவேண்டிய நிலை தவிர்க்கமுடியாதுபோய் விடுமெனக் கூறியுள்ளார்.

ஜனதிபதியின் இப்பேச்சு தன்னுடைய தீர்வு யோசனைகளை கொழும்பிலிருந்து இயங்கும் உதிரித்தமிழ்க் குழுக்கள் ஏற்றுவிட்டன. ஆனல் சிங்களவர்கள் தான் அதற்கு எதிர்ப்புக் காட்டுகிருர்கள். அவ்விதம் யோசனைகளை எதிர்த்தால் உதிரித் தமிழ்க் குழுக்களுடனும் போரிடவேண்டும் என்று சிங்களவர்களை எச்சரிப்பது போல் அமைகிறது. இது சிங்களவர்கள் ஒத்துழைக்காது போனல் நாடாளுமன்றில் தன் அரசு தோற்றுவிடும் என்ற அச்சத்தின் காரணமாக செய்யப்பட்ட பேச்சாகும். ஆனல் ஒன்று மட்டும் திண்ணம், தீர்வு யோசனைகளைச் சிங்களவர்கள் பெரும்பான்மையாக எதிர்ப்பர். ஆனல் உதிரித் தமிழ்க் குழுக்கள் அரசுக்குச் சாதகமாகவே இயங்கும். அவர்களுக்கு வேறு வழியில்லை. புகலிடம் இல்லாத அவர்களுக்கு சந்திரிகாவே கெதி. பேச்சுக்குத் தன்னும் முரண்படமாட்டார்கள்.

---

# சேர்பிய விவகாரம்; ரஷ்யா நாடாளுமன்றத்தில் அடிபிடி; அமெரிக்க தூதரகத்துக்கும் குண்டு வீச்சு

## உலக வலம்

இன்று பொஸ்னிய சேர்பிய விவகாரங்களைப் பற்றி உலக நாடுகள் பல்வேறு விதமான கோணங்களில் தமது கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றன.

ஐக்கியநாடுகள் சபையும், நேட்டோ நாடுகளும் சரஜிவோ நகரத்துக்கு அண்மையில் உள்ள சேர்பியரின் கனரக ஆயுதங்கள் இருக்கும் வரைக்கும் தமது விமானத் தாக்குதல் சேர்பிய நிலைகள் மீது தொடரும் எனத் தெரிவித்துள்ளார்கள்.

இப்பொழுது இந்தத் தாக்குதலுக்கு எதிராக ரஷ்யா அறிக்கைகளையும், தீர்மானங்களையும் தற்பொழுது பகிரங்கப்படுத்தி வருகின்றது. கடந்த வாரம் ரஷ்ய நாடாளுமன்றத்தில் சேர்பிய விமானத் தாக்குதல் பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்களே ஒருவரை ஒருவர் தாக்கும் சம்பவத்தைக்கூட உலகெங்கும்தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பி காட்டப்பட்டன. ஒரு பெண் உறுப்பினரை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டது. இந்தப் பெண் உறுப்பினர் சேர்பிய நிலைகள்மீது தொடர்ந்து விமானத் தாக்குதல் நடத்த வேண்டும் என்று ஆதரித்து வாக்களித்த இருவரில் ஒருவராகும்.

இருந்தபோதும் ரஷ்ய நாடாளுமன்றம் ரஷ்யா நேட்டோ நாடுகளின் ஒத்துழைப்பை நிறுத்தும்படியும், யூகோஸ்லாவியாமீதுவிதிக்கப்பட்ட ஐ. நா. சபையின் பொருளாதாரத் தடைகளில் இருந்து விலகும்படியும் ரஷ்யாவை கோரியுள்ளன. இதற்கான தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 258 வாக்குகளும் எதிராக 2 வாக்குகளும் கிடைத்துள்ளன.

கடந்த புதன்கிழமை கூட சேர்பிய விவகாரத்தால் ரஷ்யாவிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கு கிரனைட் வீசப்பட்டது. ஆட்சேதம் இல்லாது போனலும் கட்டடங்கள் சேதமடைந்தன. காரில் வந்த ஒரு கோஷ்டியினராலே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதென்றும், கிரனெட் வீசியவர் பாவித்த கையுறைகள் போன்றவற்றைக் கைப்பற்றி உள்ளனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொஸ்னிய சேர்பியர்மீது வேருெரு முறையில் புதிதாக தாக்குதல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குரோசியரும், முஸ்லிம்களும் இணைந்து சேர்பியர்மீது தாக்கத் தொடங்கி இருக்கின்றார்கள். 40,000 சேர்பியர்கள் அகதிகளாக ஓடத் தொடங்கினர்களாம்.

ரஷ்யர்கள் ஜனதிபதி ஜெல்சினை மேற்குநாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தி வருகின்றார்கள். ரஷ்யாவின் அழுத்தத்தால் சேர்பிய விவகாரம் திசை திருப்பப்படலாம். என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். -ம

# ஈழக்கடலில் ஆழக் காலூன்றிய சோழர் வழியில் வேங்கைக் கடல் வீரர்!

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

அத்தியாயம்–8

'ஈழம்' என்ற தமிழ் மண், முதன் முதலாக அந்நியரின் கையில் விழுந்த காலமே விஜயனின் காலமாகும். (கி. மு. 483) விஜயன் காலத்தை அந்நியரின் வருகைக்கான காலகட்டமாக மட்டுமல்ல; அந்நியரின் ஆக்கிரமிப்பு ஆரம்பமான காலகட்டமாகவும் எடுத்துக் கொண்டால், தேவநம்பிய தீசனின் காலத்தை (கி. மு. 247 - 207) அந்நியமதமான புத்தமதம், ஈழத்தை ஆக்கிரமிக்க வந்த காலகட்டமாக எடுத்துக்கொள்வதில் எந்தவித தவறுமில்லை.

உதிய: (UTTIYA)

தேவநம்பியதீசனுக்குப்பின் இவனது சகோதரனான 'உதிய' என்பவன் கி. மு. 207 முதல் கி. மு. 197 வரையான பத்து ஆண்டுக் காலம் ஆட்சி செய்தான். தேவநம்பிய தீசனைப்போல் இவனும் பௌத்த மதம் சிறக்கப் பல செயற்பாடுகளைச் செய்தான்.

சிவா (SIVA)
[கி. மு 197—187)

இவனுக்குப் பின் இவனது இன்னமொரு சகோதரரான 'சிவா' என்பவன் ஆட்சிக்கு வந்தான். இவன் 'மகாசிவன்' என்னும் பெயராலும் அழைக்கப்பட்டான். மூத்தசிவனின் பிள்ளைகளில் ஒருவனான இவன் தனது சகோதரனான உதியனிடமிருந்து கைப்பற்றிய ஆட்சியை பத்து வருடங்கள் தக்க வைத்திருந்தான்.

சூரத்தீசன்:
[SURATISSA]
[கி. மு. 187—177]

மகாசிவனுக்குப் பின் சூரத்தீசன் என்ற அவனது மற்றுமொரு சகோதரன் அடுத்த பத்து. ஆண்டுகளை ஆட்சிக் கட்டிலில் அமர்வதற்காக செலவிட்டான்.

சேன: [SENA]
குத்தா [GUTTA]
[கி. மு. 177—155]

சூரத்தீசனின் தாய் நாகத் தமிழ் அரசர் பரம்பரையைச் சேர்ந்தவளாக இருக்கலாம் என்பதற்கு அடையாளமாக பிள்ளைகளின் பெயர்களில் பல தூய தமிழ்ப் பெயர்கள் இருப்பதிலிருந்து அறிய முடிகிறது. ஆனால் உண்மையான தமிழ் அரசர்கள் இருவர் தூரத்தீசனை அகற்றிவிட்டு தம் ஆட்சிப்பீடம் ஏறுகின்றனர். சேன–குத்தா என்ற இந்தத் தமிழரசர்கள் இருவரும் இருபத்திரண்டு வருடங்கள் ஆட்சி புரிந்துள்ளனர். ஆனால் தீபவம்சமோ இவர்கள் பன்னிரெண்டு வருடமே ஆட்சி செய்ததாகக் குறிப்பிடுகிறது.

]ஆதாரம்: Dipavamsa - பக்கம்-226]

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் திரு. சி. க. சிற்றம்பலம் அவர்களால் எழுதப்பட்ட 'ஈழத் தமிழர்வரலாறு [தொகுதி-I! என்னும் நூல், [பக்கம்-20] சூரத்தீசனை 'எல்லாளன்' என்ற தமிழ்மன்னன் வென்றதாகக் குறிப்பிடுகிறது. ஆனால் மகாவம்சமோ தீபவம்சமோ, சூரத்தீசனை சேனகுப்த என்ற தமிழ் மன்னர்கள் வென்றதாகவே குறிப்பிடுகின்றன [Dipavamsa-பக்கம்-226;

அதேசயம் மகாவம்சமும், தீபவம்சமும் 'அசேலா' என்ற மன்னனையே எல்லாளன் வென்றதாகக் குறிப்பிடுகின்றன. ]Dipavamsaபக்கம்-226]

சேன - குத்தா என்ற இரு தமிழ் அரசர்களும் ஒருகுதிரை வணிகரின் மக்கள் என்று ஈழத் தமிழர் வரலாறு' [திரு. சி. க. சிற்றம்பலம் - பக்கம் · 26] குறிப்பிடுகிறது. இவர்கள் குதிரை வணிகரின் மக்களாயின் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்களா? அல்லது நாகதீபமான ஈழத்தின் வடதிசைத் தமிழரசர் பரம்பரையிலிருந்துவந்தவர்களா! என்ற கேள்விக்கு விடை தருவது கடினம்: ஏனெனில் இதற்கான சரியான ஆதாரங்கள் எதிலுமே இல்லை.

மகாவம்சமும், தீபவம்சமும் இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து வந்தவர்களென்றே குறிப்பிடுகின்றன. ஜி. சி. மென்டிஸ் என்ற வரலாற்றாசிரியர் தனது நூலில் [Ceylon Today and Yesterday - பக்கம் - 19] இந்தத்தமிழரசர்கள் தென் இந்தியாவிலிருந்தோ அல்லது உள்நாட்டுவணிகர்களாகவோ இருக்கலாமென்று குறிப்பிடுகிறார்.

தென்னிந்தியாவிலே பாண்டிய நாட்டை [கி. மு. 180-125 அன்று ஆண்டவன் பசும் பூம் பாண்டியன் என்று 'ஈழநாட்டு ஆராய்ச்சி வரலாறு [பக்கம்-26] என்னும் நூல் கூறுகிறது. அது மட்டுமன்றி, முன்னர், நான் குறிப்பிட்டிருந்த ஈழத்துப் புலவரான 'ஈழத்துப் பூதந் தேவனார் என்பவர் இம்மன்னனைப் புகழ்ந்து பாடியதாகவும் மேற்படி நூல் குறிப்பிடுகிறது. இதற்கான சரியான ஆதாரம் கிடைக்கவில்லை.

[தொடரும்[

# தீவுகளின் இராஜகுமாரி எப்படி இந்து சமுத்திரத்தின் பிச்சைக்காரியானாள்?

## ஐ. தே. க. வினதும், சு. க. வினதும் இருண்ட குகைக்குள் சிக்குண்ட இலங்கை

மு. திருநாவுக்கரசு

2010ஆம் ஆண்டிலும் கூட இலங்கையை புதிய கைத்தொழில்மய நாடாக்க (NIC) முடியாதென கடந்த வாரம் ரொனி டி மெல் கூறினார். 2000ஆம் ஆண்டில் இலங்கையில் புதிய கைத்தொழில் மய நாடாக்குவேன் என்று 1977ம் ஆண்டு சூளுரைத்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியில் நிதி அமைச்சராய் இருந்த ரொனி டி மெல்லின் மேற்படி கூற்றானது அவர்களின் கற்பனை எப்படி உதிர்ந்துகொண்டு விட்டது என்பதைத் தெளிவாக்குகின்றது.

இது ஒரு தற்செயல் நிகழ்வுமல்ல; எதிர்பார்த்திருக்க முடியாத தோல்வியுமல்ல. இது சர்வதேச அரசியற் பொருளாதாரப் போக்கினாலும், தவறான உள்நாட்டுக் கொள்கையினதும் நேரடி விளைவாகும்.

**சர்வதேச காரணிகள்**

சிங்கப்பூர் பாணியையும், தென்கொரியப் பாணியையும் ஐ. தே. க. ஆட்சியாளர் மிகப் பிழையாகப் புரிந்துகொண்டு அதீதமாகச்செய்த கற்பனையே 2000ஆம் ஆண்டில் கைத்தொழில்மய அந்தஸ்து என்பதாகும். சூழலுக்கேற்ப உயிரோட்டமாகப்பொருளாதார வளர்ச்சிகள் புரிந்துகொள்ளப்படாமல் தாய்வான், தென்கொரியா, சிங்கப்பூர் என ஜாந்திரீகமாக அவை புரியப்பட்டன. இந்நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சியில் மிகக் காத்திரமான சர்வதேசக் காரணிகள் இருந்தன.

**கெடுபிடி யுத்தம்**

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்பான கெடுபிடி யுத்தத் தேவைகளுக்காக உலகரங்கில் பல நாடுகளை அமெரிக்கா தன்பக்கம் அணிசேர்த்தபோது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தாய்வான், தென்கொரியா, சிங்கப்பூர் போன்ற அரசுகள் முதலீடு மற்றும் தொழில்நுட்பப் பலமற்ற சூழலில் தமது கேந்திரப் பலத்தை மேற்குடனான பேரத்திற்குரிய முக்கிய வளமாகப் பயன்படுத்தி மேற்கின் உதவியுடன் தம்மைக் கைத்தொழில்மய நாடுகளாக்கிக் கொண்டன.

பெரும் சனத்தொகைப் பெருக்கமுள்ள ஆசிய நாடுகள் கைத்தொழில்மயமாவதால் தமது சந்தை வாய்ப்புக்கள் பாதிக்கப்படுமென மேற்குலகு எண்ணி அத்தகைய கைத்தொழில்மய வளர்ச்சியை அவை விரும்பமாட்டா என்பது வெள்ளிடைமலை. ஆனால் வோர்சோ, நேட்டோ அணிகளுக்குஇடையேயான போட்டியின் நிமித்தம், அவற்றிற்கு இடையேயான கெடுபிடியுத்த நெருக்கடியின் பெயரால் மேற்குலகு ஆசிய நாடுகள் மீதான தமது கைத்தொழிற்பிடியைத் தளர்த்துவதற்கான வாய்ப்புகள் இருக்கவே செய்தன.

**காலதாமதம்**

ஆனல் 1980களில் இந்நிலைமை முற்றிலும் மாறியது. அதாவது இரண்டாம் உலகமகாயுத்தம் முடிந்த பின்பு அமெரிக்கா, கனடா என்பனவற்றைத் தவிர கைத்தொழில் வளர்ச்சி மிக்க ஏனைய நாடுகள் யுத்தத்தாற் சீரழிந்திருந்தன. இதனல் அவை தம்மைச் சுதாகரித்து உலகளாவிய வர்த்தகத்தில் ஈடுபடச் சில தசாப்தங்கள் தேவைப்பட்டன.

எனவே அன்றைய நிலையில் உலகிற்குத் தேவையான மொத்த கைத்தொழிற் பண்டங்களின் அளவில் 1/3பங்கை அமெரிக்கா உற்பத்தி செய்து சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்பைக் கொண்டிருந்தது. ஆனல் இந்நிலை 1970களின்முற்பகுதியில் மாறிவிட்டது. அமெரிக்காவின் உற்பத்தி 15%க்குக் கீழ் இறங்கியது எனவே புதிய கைத்தொழில்மய நாடுகள் தோன்றுது பார்த்துக்கொள்ள வேண்டியது மேற்கின் பிரதான அரசியற்—பொருளாதாரக் கொள்கை ஆயிற்று ஆயினும் கெடுபிடி யுத்தச் சூழலில் இதனை மேற்கினல் முற்றிலும் கடைப்பிடிக்க முடியாதிருந்தது.

**சோவியத் வீழ்ச்சி**

ஆனல் சோவியத் யூனியன் வீழ்ச்சியைத் தொடர்ந்து கெடுபிடி யுத்தம் முடிவடைய மேற்கு மேற்படி தனது பொருளாதாரப் பிடியினை மேலும் வலுவுடன் இறுக்கிப் பிடிக்கக் கூடியதாயிற்று.

இதுபற்றி ஒரு தெளிவான கண்ணோட்டம் ஐ தே. க. ஆட்சியாளரிடம் இல்லாதிருந்தமையால் சரியானகொள்கையையும் அதற்கேற்ற திட்டமிடலையும் செய்ய ஐ. தே. க. வினல் முடியவில்லை. இதில் அமெரிக்காவால் ஐ. தே. க. வையும் இலங்கையையும் தனக்குச்சாதகமாகக்கையாள முடிந்தது.

தாய்வான், தென்கொரியா போன்றநாடுகளைப் பொறுத்தவரையில் அவை அமெரிக்கா பக்கம் சாய்வதுதான் அவற்றின் பேரத்திற்கு உகந்ததாய் இருந்தது. ஆனல் இலங்கை இரண்டில் ஒரு பக்கமும் சாயமாட்டேன் என்ற உத்தரவாதத்தை அளிப்பதன் மூலம் அதன் பேரத்தை இரு பக்கத்திலும் வைத்திருக்கக்கூடிய வாய்ப்பை கேந்திர முக்கியத்துவதின் பெயரால் தன்னகத்தே கொண்டிருந்தது. இத்தகைய பேரம் செய்யும் பலத்தினைக் கையாள இலங்கை முற்றிலும் தவறிவிட்டது,

**முட்டுக்கட்டை**

சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உலகளாவிய கெடுபிடி யுத்தம் முடிவடைந்ததைத் தொடர்ந்து இலங்கைக்கு இருக்கக்கூடிய பேரம் பேசும் வலு முன்பிருந்ததைவிடவும்

[7-ம் பக்கம் பார்க்க]

# பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) விஞ்ஞானக் கலாநிதியானர்

பேராதனைப் பல்கலைக் கழகம், கலைப்பிரிவு மாணவர்களை வீடுகளுக்கு அனுப்பித் தற்காலிகமாகக் கலைத்துறைக்கு மூடுவிழா நடத்தியுள்ள வேளையில், யாழ். பல்கலைக் கழகம் பட்டமளிப்பு விழாவினை விமரிசையாக நடத்துகிறது,, எறிகணை மாரியும் பொருளாதாரப் பின்னடைவும் தமிழீழமக்களை அச்சுறுத்தி அகதிகளாய் ஆக்கும் சூழ்நிலையிலும் 'கல்வி கரையில கற்பவர் நாள் சில' என்று உணர்ந்து கல்விவளர்ச்சிக்கு அது ஆற்றிவரும் அரும்பணியினை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

இப்பெரும்பணிக்கும் மேலாக முன்புபோலவே இவ்வாண்டும் பல்கலைக்கழகம் சார்ந்த கல்விமான்கள் இருவருக்கு, 'விஞ்ஞான கலாநிதி' என்ற கௌரவப்பட்டம் வழங்கி, யாழ். பல்கலைக்கழகம் தன்னைக் கௌரவித்துக் கொள்வது பாராட்டி அமையாது. இப்பட்டத்தைப் பெறுவோருள் ஒருவராகப் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) அவர்கள் இடம் பெறுவது, எம்போன்ற பலரையும் மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்துகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் துரைராசா அவர்கள் அமரர் ஆன தன் பின்னர், அவருக்கும் விஞ்ஞான கலாநிதி [கௌரவப்பட்டம்] வழங்கியமை இவ்வேளையில் நினைவில் வருகின்றது. பொறியியல் நிபுணர் என்பதால் மட்டுமல்லாது அவரின் மானிடநேயத்தையும் மதித்தே அவருக்கு அப்பட்டம் வழங்கப்பட்டது என்பதை அன்று பலரும் உணர்ந்தனர். இன்றும் சமூக மருத்துவத்துறை நிபுணரும், அத்துறையிலே சர்வதேசக் கணிப்புப்பெற்றவருமான 'நந்தி' யும் அவை யாவிலும் மேலான மானிடற்திற்காகவே கௌரவிக்கப்படுகிறார் என்றே அவரின் நண்பர்களும் சக எழுத்தாளர்களும் உணர்கிறார்கள். பட்டங்களைக்குவித்துக் கொண்டதனல் மட்டும் 'நந்தி' மகிமைபெறவில்லை பழகுதற்கு இனிய பண்புகளாலும்மானிடநேயத்தாலும், உயர்வுதாழ்வு கருதாத சமத்துவநோக்கினலும் அவர் யாவரிலும் உயர்ந்து நிற்கின்றார். பேராசிரியர் பீடாதிபதி, பதில் துணைவேந்தர் என்ற விருதுகளும் மதிப்பும் இருப்பினும் இவற்றுக்கெல்லாம் அப்பாலான எழுத்தாளர் 'நந்தி'யே என்றும் எம் உள்ளங்களிலே நிலைத்து நிற்பார் என்ற நம்பிக்கையோடு, அவருக்கு எமது மனங்கனிந்த பாராட்டுக்களை மிகவும் மகிழ்வுடன் சமர்ப்பிக்கின்றோம்.

ஓர் அன்பர்.

## சிறுகதை

# தெளிவுகள்

பனித்துளி படிந்த அந்தப் புல்வெளியின் மத்தியில் இரு பறவைகள் உரத்து கூக்குரல் இட்டபடி பறந்து சென்றன. காலைக் கதிரவன் மெல்ல எழுந்துகொண்டு இருக்கின்றான். கோயிலின் அசையா மணியின் ஓசை அந்த அதிகாலை நேரம் இனிமையாக ஒலித்துக்கொண்டிருக்கிறது. திடுக்குற்று விழித்தகந்தையா பாயை சுருட்டி ஒருபுறம் வைத்துவிட்டு கிணற்றடிப் பக்கம் போகின்றார். செல்லம்மா அடுப்படிக்குள் தேனீர் வைக்கும் பணியில் இருக்கின்றாள். கால்முகம் கழுவிவிட்டு கந்தையர் திண்ணைக் குந்தில் வந்தமர செல்லமாவும் தேனீர் கோப்பையுடன் வரவும் சரியாக இருந்தது.

''அது சரியப்பா இவன் மதன்ர போக்கு அவ்வளவு சரியில்லை, கூட்டம் கூட்டம் எண்டு ஓடித்திரியிறான். இயக்கப் பொடியளும் அடிக்கடி இவனைத் தேடி வந்தபடி'' என்று கூறிய அவர் மீண்டும் மனைவியைப்பார்த்துச் சொன்னார் ''செல்லம்மா நான் ஒருக்கால் தோட்டப் பக்கம் போட்டுவாறன்'' மண்வெட்டியை சுமந்தவாறு தோட்டத்தை நோக்கிச் செல்கிறார் கந்தையா.

அவர் போன கையோடு ''அம்மா அம்மா'' என்றபடி மதன் அடிப்படிக்குள் செல்லுகின்றான்.

''தம்பி சொல்லுறன் எண்டு கோவிக்காதைநீ இயக்கப் பொடியளோடை திரியிறியாம். ஒழுங்காப் படிக்கிறதில்லையாம் எண்டு அப்பு கவலைப்படுகிறார்'' என்றாள் செல்லம்மா.

''உனக்கு தெரியுமே அவருக்கு பைத்தியம் எண்டு உனக்கும் பைத்தியமே அம்மா ஒருக்கா யோசிச்சு பாரணை எங்கடை மண்ணை மீட்க எத்தினை பொடியள் செத்திட்டாங்கள். ஆருக்காக செத்தவங்கள். எங்கடை உரிமையை மீட்டு தமிழீழம் கிடைக்க வேணும். எண்ட கனவோட அவங்கள் செத்துக்கொண்டு இருக்கிறாங்கள். உங்களுக்கு எப்பபுத்தி வருமோ எனக்குத் தெரியாது.''

''டேய் நீ வர வர எதிர்த்து வாய்காட்டிக்கொண்டு வாறாய். நான் என்ன பாவம் செய்து உன்னைப் பெத்தேனோ'' என்று கவலைப்படுகின்றாள் செல்லம்மா.

''அம்மா நான் ஒருக்கால் ஜீவா வீட்டை போட்டு வாறன்'' என்று விரைந்தான் மதன். அவன் வெளியே சென்றதும் படலையில் யாரோ தட்டும் சத்தம் கேட்டு படலையை நோக்கிசென்றாள் செல்லம்மா.

பூமணியக்கா சிரித்தபடி ''என்ன செல்லம்மா உனக்குப் புதினம் தெரியுமா? எங்கடை செல்லத்தம்பி வாத்தியாற்றை மகனையல்லே வவுனியா தாண்டிக்குளம் முகாமிலை வைச்சு ஆமிக்காரங்கள் பிடிச்சுப் போட்டாங்களாம்'' என்று கூறினாள்.

''அப்படியே விசயம். அறுந்துபோவாங்கள் எத்தனை பேரை கொண்டுபோட்டாங்கள். அது சரி. உன்ரை மகன்ர பாடு என்னமாதிரி இயக்கத்துக்குப் போனது.

''அதையேன் கேக்கிறாய் செல்லம்மா. அவங்கள் ஏதோ எல்லாம் சொல்லி எடுத்துப் போட்டாங்கள். நானும் தேடாத இடமில்லை. எல்லா இடமும் விசாரிச்சன். ஒரு இடமும் அவனைக் காண முடியாமல் இருக்கு என்றாள் பூமணியக்கா. சரி செல்லம்மா நான் சமைக்கவேணும். போட்டுவாறன் என்று செல்ல செல்லம்மாவும் வீட்டுக்குள் சென்றாள். செல்லம்மாவும் சமையலை முடித்துவிட்டு ஹோலில் உட்கார்ந்தாள்.

மதன் ஜீவனுடன் கதைத்துவிட்டு மச்சான் நீ யோசிச்சு ஒரு முடிவுக்குவா என்று கூறிவிட்டு விடு நோக்கிவருகிறான். ''அம்மா அம்மா கெதியாய் சாப்பாட்டைப்போடுபசிக்குது என்றபடி அடுப்படிக்குள் வந்தான். ஊர் மேஞ்சு போட்டு வாறாய் உன்னை திருத்தவே முடியாது'' என்றவாறு மதனுக்கு சாப்பாட்டை பரிமாறினாள் செல்லம்மா. மதன் ''சீ இந்த வீட்டிலை கொஞ்சமும் நிம்மதியில்லை. ஒரேயடியாய் துலைஞ்சுபோனால் நல்லது போல கிடக்கு என்றுகூறினான் மதன். சத்தம்கேட்டு துவாயால் முகம் துடைத்துக் கொண்டிருந்த கந்தையா ''என்னது உங்க சத்தம் இஞ்ச பார் மதன் ஒழுங்காய் வீட்டிலை இருக்கிறதெண்டா இரு இல்லாட்டி எங்கையாவது துலைஞ்சுபோ'' என்றவாறு சாப்பிட உட்கார்ந்தார் கந்தையர். மதன் தீர்க்கமான முடிவு எடுத்தவனாய் இனியும் இஞ்சை இருந்தால் நாயும் மதிக்காது. எங்கடை நிலத்தைப் பிடிச்சுக்கொண்டு சிங்களவர்கள் எங்களுக்கு வால் ஆட்டுதுகள். எங்கடை மண் நிச்சயம் மீட்கப்படும். இதனை மக்கள் நிச்சயம் உணருவார்கள். என்று மனதுக்குள் எண்ணிக்கொண்டான். மதன், இந்தாங்கோ சாப்பாடு என்று இருவருக்கும் சாப்பாட்டை பரிமாறி தானும் சாப்பிட்டாள் செல்லம்மா. மதன் ஜீவாவிட்டை கொப்பி ஒன்று வாங்கவேணும் வாங்கிக் கொண்டு வாறன் என்று புறப்பட்டான். கந்தையர் சாய் மனையில் சாய்கிறார். செல்லம்மாவும் விறாந்தையில் படுக்கிறாள்.

மதன் ஜீவா ஜீவா என்று அழைத்தபடி உள்ளே சென்றான். வா மதன் என்று ஜீவா அழைக்க கதிரையில் உட்கார்ந்தான் மதன். மச்சான் நான் சொன்னது என்னமாதிரி. அது சரி உன்ரை அம்மாவும் அப்பாவும் எங்கே அவையள் கோயிலுக்கா போட்டினம். அப்ப நீ என்னமாதிரி இயக்கத்துக்கு வாறியோ ஜீவா என்றான். இல்லை மச்சான் நான் வெளியிலேபோகப் போறன் அம்மா ஏற்பாடெல்லாம் செய்து போட்டா என்றான். ஜீவா நீ ஒரு நேரம் உணருவாய் என்றான். மதன் சரி ஜீவா நான் போட்டு வாறன் என்றபடி மதன் செல்கிறான்,

மறுநாள் விடிகின்றது ''அன்பான அம்மா, அப்பா நான் போகவேண்டிய இடத்துக்கு போகிறேன், கவலைப் படவேண்டாம். வெகுவிரைவில் உங்களைச் சந்திப்பேன். என்று எழுதிய கடிதத்தை மேசையில் வைத்துவிட்டு மதன் பாசறைநோக்கி நகர்கின்றான். வானத்தில் பறவைகள் ஒரேவரிசையில் பறந்து செல்கின்றன அப்பாவும், அம்மாவும் ஒரு நாள் உணரத்தான் போகிறார்கள் அத்தோடு ஜீவாவும் உணரத்தான் போகிறான் என்று மனதிற்குள் நினைத்தபடி வேகமாக நடக்கிறான்.

கந்தையர்எழும்பி முகத்தை கழுவிவிட்டு மதன் கிடந்த அறையைப்பார்க்கிறார். காணவில்லை, மேசையில் கடிதம் கிடக்கிறது. வாசித்துவிட்டு ''இயமன் விறுமசத்தி போட்டான் துலைஞ்சு போகட்டும்'' என்று கத்த என்னப்பா என்று செல்லம்மா திடுகிட்டவாறு வருகிறாள். ''உன்ரை அருமை மோன் இயக்கத்துக்கு போட்டான்'' ''என்ன என்ரை ..மகனை இ... ய ... க்கத்துக்கு போட்டான்'' என்றபடி கதறி அழுகிறாள். காலம் கழிகின்றது. கந்தையருக்கு இன்னும் ஆத்திரம் தீரவில்லை செல்லம்மா மகனை நினைத்து அழுதழுது காலத்தைக்கடத்திவிட்டாள். ''என்னப்பா மதன் வரமாட்டானே. ம்...'' என்று பெருமூச்சு விட்டாள்.

திடீரென முருகேசர் ஓடி வருகிறார். ''அண்ணை கந்தையாண்ணை உங்காலைப் பக்கம் எங்கேயோ சண்டை நடந்து பத்துப் பொடியள் வீரமரணமாம் எண்டு பேப்பரிலை கிடக்கு'' என்று கூற செல்லம்மாவும் கந்தையாவும் பரபரப்படைந்தனர். படலையில் யாரோ தட்டும் சத்தம் கேட்கிறது. ஆர் அது என்று கேட்டவாறு கந்தையர் செல்ல ''ஐயா அது நாங்கள் இதுதானே மதன் வீடு'' ஓம் தம்பி இதுதான். என்ன விஷயம் என்று கந்தையர் பதறியபடி கேட்டார். ''நேற்று நடந்த சண்டையில் உங்கட மகன் வீரச்சாவு அடைந்திட்டார். பொடி எடுக்கைவில்லை. படம் தான் இஞ்சை வைச்சு அஞ்சலிக்கு வைக்கப்போறம் பிறகு அடக்கம் செய்யப்போறம்'' என்று கூறினார்கள். ''ஐயோ என்ரை பிள்ளை போட்டானோ? இனி என்ன செய்வேன்'' என்று கதறி அழுதாள் செல்லம்மா. ''நடந்தது நடந்துபோச்சு இனி அழுது என்ன பயன்'' என்று கந்தையர் கூறி முடிக்க போராளிகள் பாண்ட் வாத்தித்துடன் மதனின் உருவப் படத்தை கொண்டுவருகிறார்கள். செல்லம்மாவும் கந்தையரும் கதறி அழுகின்றார்கள்.

சிறிது நேரம் அஞ்சலிக்கு வைக்கப்பட்ட பின் மதனின் உருவப்படம் நினைவுக்கல் நாட்டுவதற்காக மாவீரர் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படுகிறது. கந்தையர் குலுங்கிக் குலுங்கி அழுகிறார். கந்தையரும் செல்லம்மாவும் புதைகுழியில் மண்ணை அள்ளிப்போடுகிறார்கள். நாட்கள் நகர்ந்தன. ஜீவாவும் வெளிநாட்டுக்குப்போகும் வழியில் இராணுவம் கைதுசெய்விட்டதாக அறிவித்தல் கிடைக்கிறது. கந்தையரும் மிகவும் மாறிவிட்டார். இப்பொழுது அடிக்கடி இயக்கத்தின் முகாமுக்கு செல்வார். உதவிகள் செய்து கொடுப்பார். செல்

[7ம் பக்கம் பார்க்க]

சு. அமரேசன்

## இலங்கை இராணுவம்

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கை ஏழு மடங்காக அதிகரித்துள்ளது, பாதுகாப்புச் செலவினமும் 6 மடங்காக உயர்ந்துள்ளது. இதன் பிரகாரம் 1980ம் ஆண்டு மொத்தமாக இராணுவத்தின் தொகை 14,940 ஆகும் இது 1993ல் 1,10,000 ஆக அதிகரித்துள்ளது.

1983ல்இராணுவம் 14940ம் கடற்படை 2740ம், விமானப் படை 2200 ஆக இருந்தன இது 1993ல் இராணுவம் 90,000மும் கடற்படை 10,000மும், விமானப்படை 10,700ஆக இருந்தன.

1979ம்ஆண்டு பாதுகாப்புச் செலவினம் 411 மில்லியன் ரூபாய் 1992ல் இது 23,900 மில்லியனாக அதிகரித்துள்ளது.

ந. பரமேஸ்வரன்

## கவிமலர்

### ஆட்பலம், பொருட்பலம் தேவை

அவதாரத் தலைவனின் ஆவேசப் புலிவீரர்
அதிரடி கொடுக்கிறார் இங்கே - இதனால்
சவமாகும் சிறிலங்காப் படையினர் குடும்பங்கள்
சஞ்சலம் மூழ்குதே அங்கே

பாராளு மன்றத்தின் பதவிச் சுகங்கண்ட
பழந்தமிழ்த் தலைவர்கள்மீண்டும் - தமது
தாராள நோக்கினில் ஏதேதோ சொல்லியே
தலையைப் பிசகினார் கண்டோம்

அதர்மம் அழிந்திட ஆணவந்தோற்றிட
ஆட்பலம் பொருட்பலம் தேவை - இது
சுதந்திர தேவியின் சொந்தமண் மீட்டிடச்
சொரிந்திடும் தியாக சேவை

நிசமாகத் தமிழர்கள் நெஞ்சம் நிறைந்திட்ட
நேர்த்தி விடிவினைத் தருமே - நமது
வசமாகி வந்திடுந் தமிழீழச் சமத்துவம்
வளமான வாழ்வுதான் வருமே

''அரசியல் வாதிக்கு ஆயிரம் நாக்கு''என்ற
அர்த்தம் புலப்படும் வகையில் - அம்மா
குரங்காட்டம் சொல்லியே கொல்கிறாள் தமிழரை
கொடுப்போம் பதிலடி கொடுப்போம்

வல்லரசாகிய உலகமேல் நாடுகள்
வழங்கிடும் ஆயுதப் போரில் - எதிர்த்து
வெல்லுந் துணிவுடன் போராடும் வேங்கைகள்
வீர வரலாறு காண்பர்.

– சக்கராயுதன்.

## நூல் அரங்கு

### வேலணையூர் சுரேஷின் "உலராத மண்"

'கோடைத்தொரு குஞ்சு மெல்லப் பிறந்தது' கவியுலகின் நாயகர்கள் வரிசையில் இன்று வேலணையூர் சுரேஷ் ... அண்மையில் வெளியிடப்பட்ட 'உலராத மண்' என்ற கவித்தொகுதியில் இது தரிசனம்.

மலரும் மொட்டை மனமார வாழ்த்தி அறுகரிசி தூவி ஆசீர்வதிக்கிறார் மூத்த கவிஞர் புதுவை இரத்தினதுரை இவ்வாறு.

'கவிதையைக் கைப்பிடித்த
புதிய மாப்பிள்ளை
வேலணையூர் சுரேஷ் ...

தனது ஒவ்வொரு சொற்துளிகளிலும் வேலைச் சொருகி எம் இதயத்தை ஆழம் பார்க்கும் இளங்கவிஞனின் திறமை.

'சிந்திக்கக்கூட சிலமணி
நேரமின்றி
அந்தரப்பட்டு அச்சேறிய
கவிதை

என தன்னுரையில் கூறுவதன் மூலம் அவையடக்கத்தை தன்பாணியில் விஞ்சி விட்டார்.

எமது நாட்டில் புரண்டோடும் துன்பங்கள், அழுதுவடியும் உள்ளங்கள், ரணமாகி விட்ட வடுக்கள் அனைத்தையுமே கவிஞர் கண்முன்னே காட்சியாக்குகின்றார்.

ஒரு மனிதன் நித்திரை செய்யும்போதுதான் அனைத்து இன்ப, துன்பங்களையும் மறந்து நிம்மதியாய், சுதந்திரமாய் ... ஆனால் அந்நேரத்திலும் இராணுவத்தினர் புரியும் கொடுமை.

'பாதியிரவின் பயணம்
தொடர்கையில்தான்
எதிரி ஊதியனுப்பிய ...
எறிகணை மோதி வீழ்ந்து
வெடித்தது ...'

எரிபொருள், மின்சாரத் தடை, குண்டுத் தாக்குதல், இழப்புக்கள் அனைத்தையுமே சவாலாக்கி துயரங்களுக்குள் கீழே அமுங்கிவிடாமல் தம் கண்களென கல்வியைப் போற்றி கற்கும்போது ... பகைவனின் தரப்படுத்தலால் உடைந்துபோன உள்ளங்கள் ...

'பட்டம் எடுக்கவல்ல
பலதகுதி மாணவர்களைத்
திட்டம் போட்டு நீ
மட்டம் தட்டிடவா?'

என்று கவிஞனுக்கே உரிய கோபத்தோடு வேலணையூர் சுரேஷின் வரிகள்.

பெண்களின் மென்மையை கவி வரிகளால் வருடிய சங்க காலத்து கவிஞர்களின் கருத்தைச் சிதைத்து

'கயல் விழிகளில் புயல்
எழுந்ததோ
குயில் மொழியில் தணல்
பூத்ததோ
தாயின் வயிற்றில் தீயும்
வளர்ந்ததோ?
திருவிழி சிவந்து கரும்புலி
ஆனதோ?'


— விசாலி

எனப் பெண்களின் வீரத்தைப் பாடும் புதுக் (கவி)ஞன்.

எமது உரிமைக்காக பல தியாகங்களைச் செய்து போரிடும் திறனை மிகையாய் இன்றி நிறைவாய் இரு வரிகளில் ... கூறுகிறார்.

'எட்டாய் வளைத்து எலும்
பால் வில்தொடுத்து
குட்டைச் சிங்கத்திற்கே
குறிவைக்கும் திற
னுடையோர்'

(7ம் பக்கம் பார்க்க)



# சிறுவர் அரங்கம்

## குட்டிக்கதை

### ஏமாறுதே!

ஒரு ஊரில் கந்தன் என்ற விவசாயி வாழ்ந்து வந்தான். அவனுக்கு விவசாய நிலங்கள் இருந்தபோதிலும் வருமானமின்றி தனது குடும்பத்தை காப்பாற்ற முடியாமல் தத்தளித்தான். இருந்தபோதிலும் விடாமுயற்சியினுல் தொடர்ந்து விவசாயம் செய்து வந்தான். அந்த ஊரிலுள்ள மாரி அம்மன் கோவிலுக்கு தினமும் சென்று மன்ருடி வந்தான். இந்த ஆண்டு நெல் நல்ல விளைச்சலைக் கொடுத்தால் அம்மனுக்குப் பொங்கல் விழா வைப்பேன் என்று நேர்ந்து கொண்டான். அந்த ஆண்டு அவனுக்கு என்றுமே இல்லாதவாறு நெல் விளைச்சலைக் கொடுத்தது. அவன் நேர்ந்து கொண்டபடி தனது செலவில் பொங்கல் விழா வைத்தான்.

மேலதிகமாக இருந்த பணத்தை விவசாய வங்கியில் போடுவதற்காக சென்றபோது முருகன் என்ற சிநேகிதன் இடைவெளியில் வந்தான். அவன் பெரிய ஏமாற்றுப் பேர்வழி என்பது கந்தனுக்குத் தெரியவில்லை. ''நண்பா எனது வீடு கடந்த மாதம் மழையினுல் இடிந்துவிட்டது. திருத்துவதற்கு ஒரு ஐயாயிரம் ரூபாய் தந்தால் வட்டியும் முதலுமாய் தந்துவிடுவேன்'' பொய் சொல்லி ஏமாற்றிஞன். கந்தனும் அவன் பேச்சை நம்பி ஐயாயிரம் ரூபாய் கொடுத்து உதவிஞன், மாதங்கள் பல ஓடின. முருகன் பணம் கொடுக்க வரவில்லை, கந்தன் ஏமார்ந்தான். கந்தனுக்கும் ஏமாற்றத்தில் வருத்தம் வந்தது.

வி. பிரான்சிஸ்

## விடுகதைகள்

1. வாலுள்ள குருவி இரை எடுக்கும். சாப்பிடாது. அது என்ன?
2. மானங் காக்கும் பூ. அது என்ன?
3. காதைத் திருவினுல் கத்துவான். அது என்ன?
4. ஒரு காலில் எட்டுப் பேர் ஊர்வலம். அது என்ன?
5. எமக்கு ஒளிதருவதற்கு பின் தலை தருவான். அது என்ன?
6. வெட்டலாம், கட்டலாம் எடுத்துவர இயலாது. அது என்ன?

விடைகள்!

1. அகப்பை 2. உடுப்பு
3. வானொலி 4. குடை
5. மெழுகுவர்த்தி 6. வரம்பு.

லோ. ஜெயதரன்
கொ. இந்துக்கல்லூரி.

## தெரிந்து கொள்ளுங்கள்

1. நம் மூளையின் எடை என்ன? 1·1 கிலோ முதல் 1·5கிலோவரை.
2. ஜுபிடருக்கு எத்தனை துணைக்கோள்கள் உண்டு? 14 ஆகும்.
3. மைக்கல் அதிகம் கிடைக்கும் நாடு? இந்தியா.
4. இந்தியாவில் முதல் அணுகுண்டு வெடித்த இடம்? ராஜஸ்தான் பாலைவனம்.
5. உலகில் பெரிய ரேடியோ – டெலஸ்கோப் எங்கே அமைக்கப்பட்டுள்ளது? இந்தியாவில் கோர்டட் என்ற ஊரில்.

கே. சுதாகரன்
ஆண்டு 11,
வேலாயுதம் மகாவித்தியாலயம்,
பருத்தித்துறை.

## சுயெஸ்கால்வாய்

செங்கடலையும் மத்திய தரைக் கடலையும் இணைத்து வெட்டப்பட்டிருக்கும்கால்வாய்சுயெஸ் ஆகும். இந்து சமுத்திரத்தில் இருந்து ஆபிரிக்காவைச் சுற்றி நரோயாவிற்கு நடந்த கப்பல் போக்குவரத்தை சுயெஸ்கால்வாயால் குறுகிய பாதையாகியது. 20,000 KM பயணத்தை சுயெஸ் கால்வாய் 9500 KM ஆகக் குறுக்கியது. சுயெஸ்கால்வாயின் நீளம் 165 KM ஆகும். இதை வெட்டியவர் பேர்டினன்ட்டி லெஸ்ஸெப்ஸ் என்ற பிரான்சியர் ஆவார். 1858ல் வெட்டத் தொடங்கி 1869ல் முடித்தார். இதற்கு 55கோடி ரூபா செலவாயிற்று.

தி. விஸ்வேதிதன்
ஆண்டு 11 ஏ,
பரியோவான் கல்லூரி.

## உங்களுக்குத் தெரியுமா

★ பௌதீகவியல் என்ற சொல்லின் தூய தமிழ் சொல் எது?
இயற்பியல்

★ தமிழீழக் கடற்பரப்பின் நீளம் எவ்வளவு?
1200 km

## புத்தகம்

புத்தகம் நல்ல புத்தகமாம்
புத்தம் புதிய புத்தகமாம்
அப்பா வாங்கித் தந்த
அழகானப் புத்தகம்.

கதைகள் உள்ள புத்தகம் — நல்ல
கவிதைகள் உள்ள புத்தகம்
விடு கதைகளும் உண்டு
வியப்பான பல செய்திகளும் உண்டு.

லோ. பகிரதன்
ஆண்டு 9
கொ. இந்துக்கல்லூரி.

உண்மைச் சம்பவம்

# சாவகச்சேரியில் 16 பேரின் சடலங்கள் பாரிய குழி வெட்டி புதைக்கப்பட்டது

27 07-87 செவ்வாய் இரவு சுமார் 10 மணி இருக்கும். இந்திய இராணுவம் சாவகச்சேரி நகர்ப்பகுதிக்குள் வந்தமை பற்றி யாருமே அறியாத வேளை அது.

கலையாடிச்சாத்திரம் சொன்ன ஒருவரின் கூற்றுக்கு அஞ்சி அவர் உட்பட மட்டுவில் தெற்கு கிராமத்தில் அமைந்த கேடில்ஸ் குடியிருப்பில் இருந்து அக் குடியிருப்பைச் சேர்ந்த 22 பேர் ''கிழவி ரேஜா'' மினி பஸ்சில் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தை நோக்கி பயணத்தை மேற்கொண்டார்கள்.

இருள் சூழ்ந்த அந்த நள்ளிரவில் ''கிழவி ரேஜா'' வெளிச்சம்எதுவுமின்றிதட்டுத் தடுமாறி பிரதான வீதியை அடைந்தது. வீதி குண்டு வீச்சால் குண்டும் குழியுமாக இருந்தது. மின்சார வயர்கள் வீதி எங்கும் அறுந்து தொங்கி தடையை ஏற்படுத்தியது. அந்த பஸ்ஸில் இருந்த ஒருவரின் டோர்ச்லைட் உதவியுடன் ஒருவாறு பல சிரமங்களுக்கு மத்தியில் சுமார் அரை மணி நேரத்தில் ஒரு கிலோ மீற்றர் தூரம் சாவகச்சேரி நகர் டிறிபேக் கல்லூரியை பஸ் அண்மித்தது.

அப்போது பலத்த ஷெல் சத்தத்துடன் கலிபர் சத்தங்கள் வானைப் பிளக்கின்றன. சாவகச்சேரி நகரே அதிர்கின்றது. இந்தியப் படை பதுங்கியிருந்து மேற்கொண்ட திடீர் தாக்குதலில் கிழவி ரேஜா சின்ஞபின்னமாகின்றது. எங்கும் அவலக்குரல்கள்.

கிழவி ரேஜாவை நோக்கி இந்தியப்படை குண்டுமாரி பொழிந்தபொழுது அதில் பயணம் செய்த திருமலையைச் சேர்ந்த றஞ்சினி என்ற 19 வயதுடைய யுவதி தனது தலையில் சன்னம் பட்டு இரத்தம் வீரிட்ட நிலையிலும் மடியில் இருந்த தனது தமக்கையின் பிள்ளை ஐந்து வயதுச் சிறுமி கலைவாணியைக் குப்புறப்படுத்தி சன்னம் எதுவும் துளைக்காதபடி தனது உயிர் பிரியும் இறுதி நேரம் வரை அந்தச் சிறுமியை காப்பாற்றி உயிர்பிழைக்க வைத்துள்ளார்.

சிறுமி சில மணி நேரத்தில் சித்தியின் அரவணைப்பில் இருந்து விடுபட்டு மூன் சிறறில் இருந்த தந்தையை ஒருவாறு அடையாளம் கண்டது. அப்பா அப்பா என்று குரல் கொடுத்தவாறு இறந்த தந்தை நித்திரையென எண்ணி தந்தையின் மேல் ஏறிப் படுத்துறங்கியது பிள்ளை.

இதேவேளை தண்ணீர் தண்ணீர் என்று மன்ருடிய தனது தம்பிக்கு திருமலையைச் சேர்ந்த பரமேஸ்வரி நாகராஜா என்ற யுவதி தனது கையில் சன்னம் பட்டு பீரிட்டுக்கொண்டிருக்கும் இரத்தத்தை பருகக் கொடுக்கின்ருர். மறுகணம் அந்தச் சகோதரனை அங்கு இழக்கின்ருள்.

தனக்கு அருகில் இருந்த தனது உடன்பிறந்த இரு தம்பிமார்கள் தங்கை ஒருவர் பெற்ற தாய்' தந்தை கண்முன்னே இறந்து கிடந்த வேளை அருகில் இருந்த தங்கையைக் காணுத ஏக்கத்தில் மற்றொரு தம்பி உயிருக்காக ஊசலாடிக் கொண்டிருந்த வேளையிலும் இறுதிவரை மனம் தளராது தன்னுலான முதலுதவிகளை அந்த பஸ்சில் இருந்தவர்களுக்கு செய்து கொண்டிருந்த பரமேஸ்வரி என்ற யுவதியும் மயக்கமுறுகின்ருர். அப்படி சோகத்தின் மத்தியில் அந்த இரவு கழிந்து போகின்றது.

28-07-1987 புதன்கிழமை அதிகாலை சுமார் 6 மணி இருக்கும்.

முதல் நாள் நடந்த விமானத் தாக்குதல்கள் நள்ளிரவு கேட்ட ஷெல், துப்பாக்கிச் சத்தங்கள் இந்த நிகழ்வுகளுக்குப் பின்னும் வீடு வந்து சேராத தங்கள் உறவினர்கள் நண்பர்களைத் தேடி வேண்டியவர்கள் சாவகச்சேரி நகர்ப் பகுதிக்குச் வந்தார்கள்.

ஏற்கனவே அங்கு பதுங்கியிருந்த இந்திய இராணுவம் சாவகச்சேரி நகர்ப் பகுதிக்கு இவ்வாறு வந்தவர்களை நோக்கி சத்தவெடி போட்டு சுற்றிவளைத்து கைது செய்கின்றது.

கைது செய்தவர்களை கேடயமாக முன்வைத்து நள்ளிரவு தாக்குதலுக்குள்ளான கிழவி ரேஜாவை முன்

(7ம் பக்கம் பார்க்க)

தொகுப்பு: இ. சத்தியானந்தம்
[சாவகச்சேரி நிருபர்]

# தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

(இன்று திரு. வி. க. நினைவு தினமாகும்)

பத்தொன்பதாம் நூற்ருண்டின் இறுதிப்பகுதியில் பாரதநாட்டில் தோன்றிய தியாக சீலர்களில் திரு. வி. க. வும் ஒருவராவர். திரு. வி. க. என அன்புடனும் பெரும் மதிப்புடனும் அழைக்கப்படும் திருவாரூர் விருத்தாசலம் கலியாண சுந்தரமுதலியார் தென் இந்தியாவுள்ள துள்ளம் என்னும் சிற்றூரில் விருத்தாசல முதலியார்க்கும் சின்னம்மாள் அம்மையார்க்கும் ஆருவது பிள்ளையாகப் பிறந்தார், ''திரு'' என்றபதம் அவரின் மூதாதையரின் ஊரான திருவாரூரையே சுட்டி நிற்கின்றது.

திரு. வி. க, பலதுறைகளிலும் தொண்டாற்றிய சான்ற்ரேன். தமிழ் இலக்கியம், சமயம், சீர்திருத்தம், தொழிலாளர் நலன், அரசியல், பத்திரிகைத்துறை என அவரின் பணிகள் பரந்து விரிந்து சென்றன.

திரு. வி. க, அவர்கள் தமிழ் வசனநடையில் ஒரு திருப்பத்தினை ஏற்படுத்திஞர். அவர் காலத்தில் வழக்கிலிருந்த நீண்ட தொடர்வசனங்களைக் கையாளாது சிறுசிறு வசனங்கள் மூலம் தனது உரைநடையினை வகுத்தார். பண்டிதர் தொடக்கம் பாமரர் ஈருகச் சோர்வும், சலிப்புமின்றிப் பயின்று இன்புறக்கூடியது அவரது வசனநடை. நறுக்குத் தெறித்தாற் போன்ற சிறிய வசனங்களாலானது அவர் நடை. திரு. வி. க. ஒரு சிறந்த மேடைப்பேச்சாளர். கேட்போர் மனதைக் காந்தம் போல் கவரக்கூடியது அவரது சொற்பொழிவு. பேச்சுக்கள் அடங்கிய ''தமிழ்த்தென்றல்'' எனும் நூல் அவர் தம் பேச்சுத் திறனைப் பறை சாற்றுகின்றது. அரசியல், இலக்கியம், சமயம், சீர்திருத்தம் ஆகிய பல்வகை விடயங்களிலும் மணிக் கணக்கில் உரையாற்றக்கூடிய வல்லமை பெற்றவர் திரு. வி. க. அவர்கள்.

திரு. வி. க. ஒரு தொழிற் சங்கவாதி. தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கங்களைத் தோற்றுவித்து தொழிலாளர் நலனுக்காக அயராது சேவை செய்தார். திரு. வி. க. ஒரு விடுதலை வீரன் அந்நிய ஏகாதிபத்தியத்தினை பாரதநாட்டிலிருந்து விடுவிக்கப் புறப்பட்ட சுதந்திர வீரர்களுள் தன்னையும் ஒருவராக இணைத்துக்கொண்டார். பாரதியார் கப்பலோட்டிய தமிழன் போன்ற உயர் விடுதலை வீரர்களுடன் இணைந்து செயற்பட்டார். மகாத்மா காந்தியின் அரசியல் உரைகளை தமிழில் பெயர்த்தார். காந்தியினுல் மொழிபெயர்ப்பாளர் என அன்புடன்அழைக்கப்பட்டார்.

சீர்திருத்தம், பெண் விடுதலை ஆகிய முற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். நாட்டில் மலிந்திருந்த மூடக்கொள்கைகள், சாதிப்பாகுபாடு, பெண்ணடிமை என்பவற்றிற்கு எதிராக போர்க்கொடி தொடுத்தார். ''பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை என்ற நூலை எழுதி பெண்களின் உயர்வினை உலகறியச் செய்தார். திரு. வி. க. ஒரு சமரசஞானி. சமய சம்பந்த

[7-ம் பக்கம் பார்க்க]

பொ. ச. ஞானசீலன்

## மருத்துவம்

### மருத்துவ மூலிகை

★ தாமிரச் சத்தும் இரும்புச் சத்தும் கொண்ட பொன்ஞங்காணிக் கீரை ஒவ்வொருநாளும் சாப்பிட்டு வந்தால் கறுப்பு நிறம் உடையவர்கள் சிவப்பு நிறம் பெறலாம்.

★ வெற்றிலைச்சாறு வெட்டுக் காயஙகளுக்கு கைகண்ட மருந்து. சளியை அகற்றும் தன்மையும் வெற்றிலைச் சாற்றுக்குண்டு.

★ துளசிக்கு சளியை நீக்கும் தன்மைஉண்டு. இச் செடி வளர்த்தால் பாம்பின் நடமாட்டமும் குறையும். மற்ற தாவரங்களை விட 1400 மடங்கு அதிகமான ஒக்சிசனை நமக்குத் தருவது.

★ தேள் கடி வேதனையைப் போக்க அருமையான பச்சிலைஅறுகம்புல்லாகும். பாம்புக் கடியைப் போக்கும் தன்மை அறுகம் புல்லுக்குண்டு.

★ சண்டிக்கீரையை சமையல் செய்து சாப்பிட்டால் மூட்டு வலியில் இருந்து நிவாரணம் பெறலாம்.

## உண்மைச்

[6-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞேக்கி இந்திய இராணுவம் நகர்கின்றது. இவ்வாறு கைது செய்து கேடயமாக பயன்படுத்திய பொதுமக்களை வானுக்குள் நுளைந்து அங்கு உள்ளவர்களை மீட்டெடுத்துக் கொண்டு வருமாறு மிகவும் கடுமையாகப் பணிந்து மிரட்டி அனுப்புகின்றது.

அப்போது 16 பேர்களுடைய சடலங்கள் மீட்கப்பட்டு பிரதான வீதியின் அருகில் பாரிய குழி வெட்டி புதைக்கப்படுகின்றன. இவ்வாறு இறந்தவர்கள் ஆண்கள், பெண்கன், சிறுவர்கள், சிறுமிகள் ஆவர்.

உயிருக்காக ஊசலாடி பொதுமக்களால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுள் திருமலையைச் சேர்ந்த இரங்கன் என்பவர் மருத்துவமனையில் அருகில் இருந்தவர்களை அழைத்து எனது நண்பன் இறந்துவிட்டான். நான் இன்னும் சில நிமிடங்களுள் இறந்து விடுவேன். எனக்கு இங்கு யாரும் இல்லை. எனது உடலை தயவு செய்துபுதைத்து விடுங்கள் என்று கும்பிட்டு மன்ருடி கண்ணீர் மல்கிய நிலையில் இரங்கன் இறந்து விட்டான். இரங்கனும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அவனது நண்பனும் கௌரி (25-வயது) இங்கு சிலிப்பர் கடை வைத்து நடாத்தி வந்தவர்கள். அவர்கள் இருவர் இச்சம்பவத்தில் இறந்துவிட்டார்கள். திருமலையைச் சேர்ந்த மகேஸ்வரி பொன்னுத்துரையும் அவரது மகள் மீராவும் [10-வயது] 18 வயதுடைய இன்னெரு மகளும் இச்சம்பவத்தில் இறந்துவிட்டார்கள். ''மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்களுள் பரமேஸ்வரி நாகராசா மற்றும் அவரது 09 வயது நிரம்பிய தம்பி ஒருவரும் உயிர் தப்புகின்றனர்''

இதேவேளை மினிபஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலையடுத்து திருமதி இராஜேஸ்வரி வைத்தியநாதசர்மா (38-வயது), செல்வி யோகேஸ்வரி நாகராசா (17-வயது) ஆகியோர் பலத்த காயங்களுடன் ஒருவாறு முன்னல் கல்லூரிக் [பாடசாலைக்] கதவைத் தாண்ட முற்பட்ட பொழுது எங்கிருந்தோ வந்த சன்னங்கள் திருமதி இராஜேஸ்வரி வைத்தியநாதசர்மா கையில் எடுக்கி வைத்திருந்த ஒன்றரை வயது நிரம்பிய கைக் குழந்தையின் தலையைத் துண்டித்து விழுகின்றது. அவர்கள் தலை துண்டிக்கப்பட்ட அந்தக் குழந்தையின் உடலை அருகில் இருந்த கட்டிடத்தில் கிடத்திவிட்டு செய்வதறியாது கால் போன போக்கில் ஓடிக் கொண்டிருந்த பொழுது எவருமே அவர்களுக்கு உதவி செய்ய முன்வராத பொழுதிலும் அருகில் இருந்த போராளிகளின் முகாம் ஒன்றைக் காட்டிவிடுகிருர்கள்,

போராளிகள் முகாமை அடைந்த இவர்களுக்கு அங்கு விசேட சிகிச்சைகளை போராளிகள் வழங்கி அருகில் இருந்த பாடசாலையொன்றில் கொண்டு போய் வேண்டிய உதவிகளைச் செய்து அந்த இக்கட்டான ஒரு நேரத்திலும் அவர்களுக்கு உதவிகளைச் செய்து அவர்கள் உயிர்கள் பிழைக்க வழிவகை செய்துள்ளார்கள்.

''கிழவி ருேஜாவில் பலியானவர்களில் பலர் திருமலையில் இருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்தவர்களாவர். உயிருக்கு அஞ்சி எங்கிருந்தோ வந்து இங்கு உயிர் நீத்த அவர்களுக்கு நடந்த இந்தச் சம்பவம் தமிழர்களுக்கு இனி ஏற்பட இடமளிக்கலாகாது என்று இந்தச் சம்பவத்தை எடுததுக் கூறிய திருமதி ராஜேஸ்வரி சிவயோகநாதன் தெரிவிததார்.

## தீவுகளின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்துவிட்டது. அத்துடன் கைத்தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகள் உலகளாவிய சந்தையை ஆக்கிரமித்தும்விட்டன. இதனுல் தமது சந்தைக்கு ஊறு விளைவிக்கக் கூடியதான புதிய கைத்தொழில்மய வளர்ச்சிக்கு மேற்கு தடையாகவே இருக்கும்.

ஜப்பானினதும் புதிய கைத்தொழில்மய நாடுகளான தாய்வான், தென்கொரியா, மலேசியா, சிங்கப்பூர் போன்றவற்றினதும் மென்ரகக் கைத்தொழில் பண்டங்கள் ஆசியாவின் மேற்கின் மென்ரகப் பண்டங்களின் சந்தையைப் பெரிதும் வீழ்த்திவிட்டன. எனவே புதிதாக கைத்தொழில்மய வளர்ச்சியை அடையக்கூடிய சாத்தியமுள்ள நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சியைத் தடுப்பதில் மேற்கு கண்ணும் கருத்துமாய் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

### சந்தைப் பொருளாதாரம்

ஜே.ஆர். அரசாங்கம்கடைப்பிடித்த திறந்த பொருளாதாரக்கொள்கை என்பது உற்பத்திக்கு உதவக்கூடிய திறந்த பொருளாதாரக் கொள்கை அல்ல. அந்நியப் பண்டங்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு ஏதுவான அந்நிய நாடுகளுக்கான திறந்த வர்த்தகப் பொருளாதாரம்தான். இவற்றைத் தவிர கிடைக்கக்கூடிய வளங்களை ஐ, தே. க. தமிழரை ஒடுக்குவதற்கான யுத்தத்திற்குத் திருப்பி வளர்ச்சியைச் சாத்தியமற்றதாக்கியது.

உற்பத்திச் சக்திகளை வளர்ப்பதற்கு மேற்குலகின் தொழில் நுட்பமும் முதலும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்குத் தேவைப்படுகின்றன. அதேவேளை மேற்குலகிற்கு ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் சந்தைகளும் மற்றும் வளங்களும் தேவைப்படுகின்றன. இத்தகைய இருதரப்புத் தேவைகளின் மத்தியில் மேற்கைதிட்டமிட்டு நிதானமாகவும் வரம்பு கடக்காத வகையிலும் கையாண்டால் முன்னேற்றத்தை ஏற்படுத்த இயலும்.

### சீனுவின் உபாயம்

சீன மேற்கினது தொழில் நுட்பத்தினையும், முதலீட்டினையும் பெறுவதற்காக கட்டுப்பாட்டுடன் கூடிய திறந்த வலயங்களை வைத்திருக்கின்றது. அது முழு சீனுவையும் மேற்குலகுக்குத் திறந்துவிடவில்லை. மேற்கின் உற்பத்திச் சக்தி வளர்ச்சியை உள்வாங்குவதற்குச் சீன சில வாயில்களை திறந்துவிட்டிருக்கிறது. போதிய வளர்ச்சியை உள்வாங்கிய பின்பு இந்த வாயில்களை அடைத்தால் சீன பாதுகாக்கப்பட்டுவிடும் என்பதே தற்போதைய சீனுவின் அணுகுமுறை.

உலகளாவிய திறந்த பொருளாதாரப் போக்கை சீனுதான் ஒப்பீட்டு ரீதியில் தனக்குப் பொருத்தமான வகையிற் கையாளும் நாடாய் உள்ளது. ஆனல் இலங்கையின் திறந்த பொருளாதாரம் இலங்கையை அந்நிய சக்திகளுக்கு முற்றிலும் வேட்டைக்காடாக்கிவிட்டது. ஐ. தே. க. ஸ்தாபித்துவிட்டதன் தொடர்ச்சியை சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கியமுன்னணி அரசாங்கம் தொடர்ந்து பின்பற்றுகிறது.

### வாய்ப்பு இல்லை

எனவே உள்நாட்டு அரசியற் பொருளாதாரம், சர்வதேச அரசியற் பொருளாதாரம் என்பவற்றின் படி இலங்கைக் கைத்தொழில்மய நாடாவதற்குரிய வாய்ப்பு வரப்போகும் சில தசாப்தங்களுக்கும் இல்லை என்பது தெளிவு.

## பணமாக செலுத்தவும்

(யாழ்ப்பாணம்)

தற்போது முத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் வழமையாக தபால் அறிமுக அட்டைக்கு பெறப்படும் முத்திரை கட்டணத்தை பணமாக பெற்றுக்கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு சகல தபால் அதிபர்களுக்கும் பிரதித் தபால்மா அதிபர் எஸ். மாணிக்கவாசகர் அறிவித்துள்ளார். 170-சி

## வேலணையூர்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறே பல விடயம்
உணராத மண்ணில் ...

அங்கங்கே அச்சு வாகனமேறியவற்றையும் இதற்கெனவே வெற்றுத்தாழ்களில் பதித்தவற்றையும் அள்ளிக்கோர்த்து ஒரு கவிமாலையாய் எம் கைகளில் தந்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி;

நாம் தொட்டுக்காட்டாத இடங்களிருக்கலாம் ஆனல் வேலணையூர் சுரேஷின் மைபடாத விடயங்கள் இல்லை எனலாம். கவிப்பணி தொடர வாழ்த்துக்கள்;

## தெளிவுகள்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லம்மாவும் நன்ருக மாறிவிட்டாள். சாப்பாடுகள்செய்து முகாமுக்குகொண்டு சென்று கொடுப்பாள். மகனுடைய கனவை நனவாக்க வேண்டும் என்று கூறுவாள். இந்த மண்ணின் விடிவிற்கு அதிக தூரம் இல்லைகாலைக் கதிரவன் மெல்ல எழுகின்றது. புதிய பறவைகள் பறந்து செல்கின்றன.

[யாவும் கற்பனை[

## தமிழ்ப் பெரியார்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மான நூல்களை காய்தல், உவத்தலின்றி ஆய்ந்து ஆராய்ந்ததார். சமயங்களிடையே நிலைத்து நிற்கும் பொதுமையினை உணர்ந்தார். சகல சமயங்களும் மனித ஈடேற்றத்திற்காக தோன்றியனவே என வாதிட்டார். சமயங்களிடையே சமரச உணர்வு தோன்றவேண்டிய அவசியத்தை உணர்த்தினுர். அந்நோக்கை வலியிறுத்திப் பல கட்டுரைகள் வரைந்தார். இல் வாழ்க்கையை மேற்கொண்ட திரு. வி. க. அவர்கள் நாளடைவில் தனது மனைவி, மக்களை இழந்து தமது தமையனுருடன் வாழ்ந்தார்.

திரு. வி. க. தமது வாழ்நாளில் ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டார், ''என் கடன் பணி செய்து கிட்ப்பதே'' என்ற வாக்கியத்தை மகுடமாகக் கொண்டு தன் வாழ்வின் இலட்சியத்தை புலப்படுத்தி ஒரு நூலை எழுதினுர். திரு. வி. க. வாழ்க்கை வரலாற்றை வெளிப்படுத்த ''திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் என்ற நூலை எழுதி வெளியிட்டார். அந்நூல் ஓர் இலக்கிய பொக்கிஷமாக மிளிர்கின்றது. அவர் காலத்தைய அரசியல், சமூக வரலாறு அந்நூலில் தெற்றென விளங்குகின்றது.

---

ஐ. தே. க.வின் இடதுசாரி எதிர்ப்பு, சரணுகதியான மேற்குலகக் கூட்டுத் தமிழின அழிப்பு என்பன இலங்கையை அவர்களின் ஆட்சிக்காலத்தில் கைத்தொழில் வளர்ச்சியில் இருந்து முற்றிலும் தள்ளி வைத்தது சு. க.வின் தமிழின எதிர்ப்பு, கண்மூடித்தனமான வெளிநாட்டுக் கொள்கை, கற்பனையான பொருளாதாரக் கொள்கை என்பன அவர்களின் ஆட்சிக் காலத்தில் கைத்தொழில் வளர்ச்சியிலிருந்து இலங்கையை முற்றிலும் தள்ளி வைத்தது. இவை இலங்கையை ஆதிக்குகை ஒன்றுள் புதைத்துவிட்டன. தமிழீழம் அதிலிருந்து உடைந்து மீளும்.

# தியாகி திலீபன் நினைவாக இன்று உண்ணுவிரதம்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 8வது ஆண்டு நினைவாக யாழ் மாவட்ட ரீதியில் இன்று 17ம் திகதி நடைபெறும் உண்ணுவிரதங்கள் பற்றிய விபரங்கள்!-

வலிகாமம் கோப்பாய் வட்டம்-:

நீர்வேலி ப:நே.கூ சங்கம் உற்பத்திக் குழுக்கள் ச,சநிலையங்கள், மாதர்சங்கங்கள். சிறுப்பிட்டி ச.ச. நிலையங்கள் மாநர்சங்கங்கள், உற்பத்திக் குழுக்கள், அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம், இடைக்காடு மகாவித்தியாலயம், உடுவில் வட்டம் - அளவெட்டி, மல்லாகம் ப.நோ: கூ.சங்கம், சுன்னுகம் சிற்றூர் இடம்பெயர்ந்த மக்கள்.

தீவகக்கோட்டம் (நல்லூர்)

டயஸ் குடியிருப்பு மக்கள் ஊர் -பிரதேசசெயலகப் பணிமனை, கைதடிவட்டம் -நாவற்குழி மகாவித்தியாலயம், சித்திவிநாயகர் ச:ச: நிலையம், நாவற்குழி வர்த்தகச் சங்கம், வர்த்தக ஊழியர் (சாவகச்சேரி) மட்டுவில் வடக்கு, கிழக்கு தேவகி குடியிருப்பு, சிற்றூர்தி சேவை ஒன்றியம், (கொடிகாமம்) வரணி, மிருசுவில், எழுதுமட்டுவாள, புதுர்ச்சந்திவணிகர்மன்றங்கள் (பளை) இத்தாவில், சிற்றூர் மக்கள் ப.தெ.வ.அ.கு சங்கம்

உடுப்பிட்டி வட்டம்- பாரதி, காந்தி. கலைவாணி, பொன் சுந்தையா சனசமூக நிலைய உறுப்பினர்கள் உடுபபிட்டி வர்த்தகர் சங்கம்.

கரவெட்டி வட்டம் - 750 சிற்றூர்திச்சேவை உறுப்பினர்.

பருத்தித்துறை வட்டம் ஹாட்லிக்கல்லூரி, புலோலி சித்தி விநாயகர்.

கடற்புலிகளின் யாழ் மாவட்ட பிரதேசங்களில் வட்ரீதியாக தியாகி திலீபனின் நினைவுநாள் உண்ணுவிரதம் இன்று 17ம் திகதி நாகர் கோவிலில் குடத்தனை மக்கள் கலந்துகொள்வர்;

# இவ்வாரம் எப்படி?

17–09–95 முதல்
23–09–95 வரை

### மேடம்:

குடும்பத்தில் இனம்புரியாத அமைதியுண்டு, புதிய முயற்சிகள் தடைப்படும், வேண்டாத செலவுகள் உண்டாகும், தொழில் மத்திமலாபமுண்டு. நண்பர்கள் கருத்துமுரண்பாடு தோன்றும். சுமாரானவாரம்.

### இடபம்:

குடும்பத்தில் நிம்மதிகுன்றும், செய்தொழிலால் மந்த நிலையும் விருமான பற்றுக்குறையுமிருக்கும், வரவினர்களின் செயற்பாடுகள் கவலைதரும் பயணங்கள் தடைப்படுவதுடன் அலைச்சலுமுண்டு, நன்மைதராதவாரம்.

### மிதுனம்:

தொழிலில் நஷடங்களும், பணியாளர்கள் கவலையுமுண்டு, குடும்பத்தில் சந்தோசமும், கருத்துமோதல்களும் இருக்கும், தீராதபிரச்சனையொன்று மீண்டும் மனச் சங்கடத்தைத்தரலாம், எதிர்பார்ப்புக்கள் தாமதமாகலாம், மனப்போராட்டம் நிறைந்த வாரம்.

### கடகம்:

குடும்பத்தில் அமைதியுண்டு சுபகாரியங்களுக்கான செலவினமுண்டு, தொழில் பெரும் சிரமத்தின் மத்தியில் கைகூடும், செலவு அதிகரிக்கும் வாரம்:

### சிங்கம்:

குடும்பத்தில் கஷ்ட நஷடங்கள் உண்டு தொழில் லாபம் குறைந்து காணப்படுவதால் பணநிலை பாதிப்படையும், கொடுக்கல் வாங்கல் மனவேதனையைதரும், பெண்களால் துன்பமுண்டு, மனச்சுமையான வாரம்;

### கன்னி:

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியுமுண்டு, தொழிலில் புதிய முதலீடுகளும் வருவாய் பெருக்கமும் இருக்கும், தெய்வீக செலவினமுண்டு, நன்பர்கள் அனுகூலமாக இருப்பர், எதிர்பாராத நன்மை கிட்டும் வாரம்.

### துலாம்:

குடும்பத்தில் மறைமுக எதிர்ப்புக்கள் உண்டு, தொழிலால் போட்டிகளும், அதனுல் வீண்விரயங்களும் இருக்கும், புத்திரர் பகைமை நிலவும், பொதுத்துறை ஈடுபாடு பெருமைதராது, மத்திம வாரம்.

### விருச்சிகம்:

குடும்பத்தில் பூசல்களும் அமைதிக்குறைவுமுண்டு, தொழில் மனநிறைவைத்தராது பணப்புளக்கம் கவலைதரும், காரியங்களில் தாமதமும் தலைகுனிவுமுண்டு, சகோதர பகையுண்டு, அலைச்சலான வாரம்.

### தனுசு:

குடும்பத்தில் கவலைகளும், பற்றற்ற தன்மையுமுண்டு. தொழிலில் மறைமுக நிர்ப்பந்தங்கள் உருவாகும், பணநிலை திருப்திதராது. ஆடம்பர செலவீனங்களுண்டு, மனநிலை பாதிப்படையும், குளப்பமான வாரம்.

### மகரம்:

குடும்பத்தில் உன்னத நிலையும் கலகலப்புமுண்டு, தாய் வழிஉதவியுண்டு, தொழிலில் பாராட்டும்; நல்ல வருமானமும் உண்டு, பணநிலை உற்சாகமாககாணப்படும், முயற்சிகள் பலிதமாகும், அதிஸ்ட வாரம்.

### கும்பம்:

குடும்ப சுகம் பாதிக்கும், குடும்ப உறவில் விரிசலுண்டு வைத்திய செலவுண்டு, தொழிலில் எதிர்பாராத நஷ்டங்கள் உருவாகும், மேலதிகாரிகள் துன்பம் தருவர், பணநிலை கடன்படவேண்டி வரும், துயரவாரம்,

### மீனம்:

குடும்பத்தில் நெருக்கடி இருக்கும், பிரச்சனையொன்று உருவாகும். தொழில் நிலை திருப்தி தராது, விரோதி வன்மம் அதிகமாகும், பணக் கஷ்டமுண்டு, நண்பரை பகைத்துக்கொள்வீர்கள், குழம்பிய வாரம்.

கணிப்பு: ஜோஸ்யர்,


## மொழிபெயர்ப்பாளர்கள் தேவை

ஆங்கிலப் பத்திரிகைகள், புத்தகங்கள். திரைப்படங்கள் ஆகியனவற்றை தமிழாக்கம் செய்யக்கூடிய மொழிபெயர்ப்பாளர்கள் உடன் தேவை.

விண்ணப்பிக்கவும் :

விளம்பர இல. 1671,
ஈழநாடு, யாழ்ப்பாணம்.

[சி-1671]

## ஒன்பது ராணுவ சடலங்கள் ஐ.சி.ஆர்.சி.யிடம் ஒப்படைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஒன்பது இராணுவத்தினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைத்தனர்.

மட்டக்களப்பு 19-ம் கட்டை இராணுவ முகாமிலிருந்து 36-ம் கொலனி இராணுவ முகாமை நோக்கி ரோந்து சென்ற 20 க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் 15 க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் கைப்பற்றப்பட்ட ஒன்பது இராணுவத்தினரின் சடலங்களே விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டன. -ர-ரி

வெடித்துச் சிதறிய விமானத்தில்

## பொலிஸாருக்கு சம்பளம் வழங்க 11லட்சம் ரூபா எடுத்து வரப்பட்டது

(கொழும்பு)

கடந்த புதன்கிழமை கந்தானை கடல் பகுதியில் வெடித்துச் சிதறிய அன்ரனேவ் விமானத்தில் வடபகுதியில் கடமையாற்றும் சிறிலங்கா பொலிசாருக்கான பதினொரு லட்சம் ரூபா சம்பளப் பணமும் எடுத்துவரப்பட்டதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இவ்விமான விபத்தில் கொல்லப்பட்டவர்களில் மேஜர் சில்வா, மேஜர் ஹெட்டியாராய்ச்சி, கப்டன் ஜெயசேன, கப்டன் கப்பகொட, பொலிஸ் சார்ஜன்ட தவராசா ஆகியோரும் ஸ்குவாட்டன் லீடர்களான ஆர். பாக்கியநாதன் எச். வீ கருணாரட்ண' பிளைட் லெப்டினட் ஜீ.யு.சி.ரகண்ட வெல ஆகியோரும் அடங்குவர் இவர்களை விட 12 கோப்ரல்களும், 10 லான்ஸ் கோப்பரல்களும் கொல்லப்பட்டுள்ளனர். -ரி

## சென்னை குண்டு வெடிப்பு தமிழ் இளைஞர் கைது

(சென்னை)

சென்னையில் இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் தொடர்பாக தமிழர் விடுதலைப் படையைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தென்னாற்காடு மாவட்டம்சேக்கியார் தோப்பைச் சேர்ந்த வேல்முருகன் என்பவரை பொலிசார் காரைக்காலில் கைது செய்தனர்.

தென்னாற்காடு மாவட்டத்தில் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெப்பு, கும்பகோணம் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் மீதான தாக்குதல் உட்பட பல வெடிகுண்டுத் தாக்குதல் தொடர்பாக இவர் தேடப்பட்டு வந்தவரென தமிழகப் பொலிசார் தெரிவித்துள்ளனர். -சி-ரி

எல்லைக்கிராமங்களிலுள்ள

## சிங்கள குடியேற்ற வாசிகள் பாதுகாப்பு வழங்க கோரிக்கை

(கொழும்பு)

தென்தமிழீழத்தின் எல்லையோர அத்துமீறிய குடியேற்றங்களில் உள்ள சிங்கள குடியேற்றவாசிகள் தாம் தொடர்ந்து வசிப்பதற்கு பாதுகாப்பு உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும் என அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

எல்லையோரங்களில் இருந்த இராணுவத்தினரையும் விசேட அதிரடிப்படையினரையும் அரசு விலக்கிக்கொண்டதை அடுத்தே இவ்வாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து விசேட ஆயுதப்பயிற்சி பெற்ற பொலிசாரை எல்லையோர சிங்களக் குடியேற்றப் பகுதிகளுக்கு அனுப்ப அரசு தீர்மானித்திருப்பதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. -ரி

## கிழக்கில் படைமுகாம்கள் பலப்படுத்தப்படுகின்றன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

பழுகாமம், அம்பிலாந்துறை, கொக்கட்டிச்சோலை, பெரியபோரதீவு, மகிழடித்தீவு ஆகிய பகுதிகளில் சிறிலங்கா அதிரடிப்பிரிவு முகாம்களும், பொலிஸ்நிலையங்களும் புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டு பலப்படுத்தப்படுவதாகத் தெரிய வருகின்றது.

சிறிலங்கா இராணுவத்தினர் பெருமளவில் வெளியேறியபகுதிகளில் உள்ள முகாம்களே இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

விடுதலைப்புலிகள் கிழக்கிலுள்ள முகாம்களை தாக்கலாம் என்ற அச்சத்தின் காரணமாகவே தற்போது கிழக்கிலுள்ள முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. ர-சி-ரி

## பாதுகாப்பு நிதி கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பாதுகாப்பு நிதி சம்பந்தமான கலந்துரையாடல் நாளை 18ம் திகதி திங்கள் காலை 10மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் ஜே/281 பத்தமேனி, ஜே 282 கதிரிப்பாய், ஜே/283 இடைக்காடு, ஜே/284 வளலாய் கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களில் ஒவ்வொருவர் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். ரி

விழுந்து நொருங்க முன்னரே

## அன்ரனேவ் விபத்து பற்றி தெரிவிக்கப்பட்டதாம்

(கொழும்பு)

அன்ரனேவ் விமானம் விபத்துக்குள்ளாகப்போகின்றது என்று அது விழுந்து நொருங்குவதற்கு முன்பே ஒருவர் பத்திரிகை அலுவலகம் ஒன்றுடன் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார் என்று பி.பி.சி. சிங்கள சேவை தெரிவித்தது.

இதேவேளை இந்த விமானம் வெடித்து கடலில் வீழ்ந்ததை பல மீனவர்கள் கண்டுள்ளனர்.

இதனால் இந்த விமானம் காலநிலை சீரற்றதால் விபத்துக்குள்ளானது என்பதற்கு மேலாக வேறு கோணங்களில் பல பல தகவல்கள் கிடைத்து வருகின்றன என்று பி. பி. சி. சிங்கள சேவை மேலும் தெரிவித்தது. -ம ரி

ஹெந்த கப்பலில்

## வடக்கிற்கு மா அனுப்புமாறு அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் இருந்து மாவை ஏற்றிக்கொண்டு வழமைக்கு மாறாக கொழும்பு நோக்கி புறப்படவிருக்கும் ஹெந்தல கப்பலை வடக்கிற்கு மாவுடன் உடனடியாக அனுப்பிவைக்குமாறு யாழ். அரசாங்க அதிபர் நேற்று கொழும்பில் உள்ள அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு சர்வதேச செஞ்சிலுவை சங்கம் மூலம் அனுப்பிவைத்துள்ள செய்தியில் கேட்டுள்ளார்.

இக்கப்பல் திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு மாவை ஏற்றி இறக்கும் சேவையிலேயே அமர்த்தப்பட்டது.

ஆனால் இக்கப்பல் திருகோணமலையில் மாவை ஏற்றிக்கொண்டு பருத்தித்துறைமுகம் வராமல் வழமைக்கு மாறாக கொழும்பு நோக்கி செல்வதாக யாழ். செயலகத்திற்கு தகவல் கிடைத்துள்ளது.

இக்கப்பலை கொழும்புக்கு செல்லாமல் மாவுடன் பருத்தித்துறைக்கு அனுப்பி வைக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். 170-ரி

## துப்பாக்கிவேட்டு ஷெல்தாக்குதல்

(தாளையடி)

கடந்த வியாழக்கிழமை இரவு ஒன்பது மணி தொடக்கம் நள்ளிரவு வரை வெற்றிலைக்கேணி இயக்கச்சி, ஆனையிறவு இராணுவ முகாம்களிலிருந்து பாதுகாப்பு எல்லைவேலிப் பகுதிகளிலிருந்தும் தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன இதனைத் தொடர்ந்து குடியிருப்புக்களை நோக்கி செல் தாக்குதலும் இடம்பெற்றது.

இச்ஷெல்கள் புதுக்காடு, கரத்தாய் சோறன்பற்று, மரசார் வீர்க்களி ஆற்றுப் பகுதிகளில் விழுந்து வெடித்தன. 162-ரி

## பாதுகாப்பு நிதிக்கு 5 லட்சம் ரூபா

[யாழ்ப்பாணம்]

தமிழீழ தேசிய பாதுகாப்பு நிதிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் நிர்வாகம் ஐந்து லட்சம் ரூபாவினை நிதித்துறையாளரிடம் வழங்கியுள்ளதுடன் மேலும் தமது நிதி இருப்பில் இருந்து நிதி வழங்கவும் முடிவு செய்துள்ளது. -ரி

### தியாகி திலீபனின்

(1ம் பக்க தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்திய பின்னரே தமது நாளாந்த கடமைகளில் ஈடுபட்டனர்.

வீதிகள் மற்றும் இடங்கள் எங்கும் பந்தல்கள் அமைக்கப்பட்டு தியாகியின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றன.

நல்லூரில்

நல்லூர் ஆலய முன்றலில் அமைகப்பட்ட விசேட அலங்காரப் பந்தலில் உண்ணாவிரத நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்று கலந்துகொண்டனர். இந்த உண்ணாவிரதத்தில் பாடசாலை மாணவர்கள், யாழ் வர்த்தகர்கள், மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

வரலாற்று கண்காட்சி

நல்லூர் ஆலயத்தின் தெற்குப் பகுதியில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் வரலாற்றுக் கண்காட்சிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியில் தியாகியின் படைப்புக்கள் மற்றும் போராட்டம் சம்பந்தமானவை வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலும் தியாகியின் நினைவு தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. -170-ரி

### வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுந்தரம் சின்னராசா (வயது-50) வலது காலில் காயமடைந்தார்.

இவரது மனைவி சு. மனோரஞ்சிதம் [வயது-45] இவர்களது மகள் சு. தர்ஷிகா [வயது-02] ஆகியோர் தமது வலது கால்களை இழந்தனர். இவர்களது மற்றொரு மகளான சுந்தரம் - தர்சினி [வயது-16] கண்ணில் காயமடைந்தார். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் நால்வரும் மந்திகை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது வீடு தரைமட்டமானது. வேறொரு ஷெல் வீச்சினால் வல்வெட்டித்துறை தெணியம்பைப் பகுதியிலுள்ள சாராயத் தவறணையும் அருகிலுள்ள மதில்களும் சேதமாகின.

தொண்டைமனாறு கடற்கரையோரம் மயிலியதனை கடற்கரைப் பகுதி, கெருடாவில் கேணயடிப் பகுதி, தோட்டவெளி, வல்லைவெளி, உடுப்பிட்டி, வல்வெட்டி பழைய பொலிஸ் நிலையப் பகுதி, வல்வெட்டித்துறை தெணியப் பகுதி போன்ற இடங்களிலும் ஷெல் வீழ்ந்து வெடித்தன. -51-160-ரி

### அணு ஆயுத

(1ம் பக்க தொடர்ச்சி)

னது மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் எனவும் எனவே தொடர்ந்து மேற்கொள்ளவிருக்கும் அணு ஆயித பரிசோதனையை உடனடியாக நிறுத்தவேண்டும் எனவும் இப் பெண்கள் கோரிக்கை விடுத்தனர். ர-ரி

### விமானசேவை

(1ம் பக்க தொடர்ச்சி)

தெரிவிக்கின்றன.

உள்ளூர் விமானப் போக்குவரத்து இடை நிறுத்தத்தால் விமானப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு பல கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை விமானம் வெடித்துச் சிதறிய சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள இந்தியாவின் உதவியை நாடியுள்ளதாகவும் உக்ரைன் நாட்டிலிருந்து பிரதிநிதிகள் சிலர் வந்துள்ளதாகவும் அரச சரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ரி

### கண்மூடித்தன

(1ம் பக்க தொடர்ச்சி)

இராணுவத்தினரின் கண்மூடித்தனமான ஷெல்தாக்குதல்களினால் அப்பாவிப் பொதுமக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். ரி

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த
'வேரும் விழுதுகளும்'
கல்வியியற் கண்காட்சி
இடம்: நுணுவில் கண்ணகை அம்மன் கோவிலடி
நிகழ்வு நேரம்: காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது
உள் அனுமதிக்கப்படும் இறுதி நேரம் மாலை 5-30 மணி
எங்களைத் தேடி... செல்வோமா?
செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்
(ஏ-5259)

நிலம் கீறி விதைபோடு நீர்ப்பபாய்ச்சி
பயன் பெறு வளமுள்ளதெம் நாடு
வாயார நீ பாடு

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.